Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTER NET
BROWSING CENTRE
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை.
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. Road, Jaffna. T.P. 021-2222670, 2223588
Fax - 2223214, Email-del - smskr@eureka.lk
(சி-888)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 வைகாசி 20 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.அவ்வல் 31 (03.06.2003) செவ்வாய்க்கிழமை இதழ்: 242

## மந்தநிலையில் அரச இயந்திரம்: புலிகளின் கணிப்பீடு சரியானதே!

### உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி பிரதிநிதிகள்

இலங்கை அரசாங்கத்தின் கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் அரச அதிகாரிகள் மட்டத்தில் செயலாற்றலற்ற தன்மை நிலவுவதாக புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளது உண்மையே என்று, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலகவங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாகக் கோரிக்கைக்கு மாற்றாக அரசாங்கம் முன்வைத்த யோசனையை நிராகரித்து, புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதிய கடிதத்திலேயே - அரச அதிகாரிகள், கொள்கை வகுப்பாளர்களின் (10 ஆம் பக்கம் பார்க்க)

## சமூகச் சீரழிவைக் கட்டுப்படுத்த விடுதலைப் புலிகள் நடவடிக்கை!

### குற்றமிழைப்பவர்கள் மக்கள்முன் நிறுத்தப்படுவர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் தற்போது பரவலாக நடைபெற்றுவரும் கொலை, கொள்ளை, கோஷ்டி மோதல் மற்றும் பெண்கள் மீதான பாலியல் ரீதியான வன்முறைகள் என்பவற்றை இல்லாமல் ஒழிப்பதற்கு, தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறை நடவடிக்கை எடுக்கவிருக்கிறது.

அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தில் பல கொலைகளும், கொள்ளை, பாலியல் வன்முறைச் சம்பவங்களும் மற்றும் கலாசாரச் சீரழிவுகளும் அதிகரித்து வருகின்றன. இவற்றால் மக்கள் பெரிதும் அச்சமடைந்துள்ளனர்.

எனவே - இவற்றைக் கட்டுப்படுத்தி, மக்கள் மத்தியிலுள்ள அச்ச உணர்வை நீக்குவது தொடர்பாக, (10 ஆம் பக்கம் பார்க்க)

### நகைக்கடையில் இளைஞன் மர்ம மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரிலுள்ள நகைக் கடையொன்றில் பணியாற்றிவந்த இளைஞன் ஒருவர் - மர்மமான முறையில் மரணமானநிலையில், கடையிலிருந்தே சடலமாக மீட்கப்பட்டார். இதனால் அப்பகுதியில் நேற்று பதற்றம் நிலவியது.

கஸ்தூரியார் வீதியில் உள்ள கணேசா ஜுவல்றி என்ற நகைக் (10 ஆம் பக்கம் பார்க்க)

# அரசின் யோசனை பற்றிப் பேசுவதற்கு புலிகளுக்கு பிரதமர் ரணில் அழைப்பு!

## இடைக்கால நிர்வாக அலகு தொடர்பில் பிந்திய கடிதத்திலும் பேச்சுமூச்சில்லை



(கொழும்பு)

**அரசாங்கம் முன்வைத்திருக்கும் வட - கிழக்கு அபிவிருத்திக்கான மாற்று யோசனையில், விடுதலைப் புலிகளுக்கு முக்கிய பங்கிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டும் - இத்திட்டத்திலுள்ள விடயங்கள் பற்றி ஆராய்வதற்கு நேரடியான கலந்துரையாடலுக்கு வருமாறும் - விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைத்துள்ள பதில் கடிதத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.**

**இக்கடிதத்தில், புலிகளின் கோரிக்கையான இடைக்கால நிர்வாகம் பற்றி அவர் எவ்விடத்திலும் குறிப்பிடவில்லை.**

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்திற்கு முகவரியிடப்பட்டு, நேற்றுமுன்தினம் இரவு அனுப்பிவைக்கப்பட்டுள்ள இக்கடிதத்தில்,

பேச்சுக்கள் மூலமாக பிரச்சினைகளைத் தீர்க்க முயலும் விடுதலைப் புலிகளின் நோக்கத்தையும் - அமைதி முயற்சிகளில் அவர்களுடைய விசுவாசத்தையும், தீவிரமான அர்ப்பணிப்பையும் பிரதமர் பாராட்டியுள்ளார்.

அரசாங்கம் முன்வைத்திருக்கும் மாற்றுயோசனைகள் பற்றிக் குறிப்பிடுகையில் -

அரசின் யோசனை -வலுவானது, வெளிப்படைத் தன்மையானது, (10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மாணவர் எழுச்சிநாள் எதிர்வரும் வெள்ளியன்று!

### உணர்வுபூர்வமாகக் கொண்டாட ஏற்பாடு

யாழ். மாவட்டத்தில், தமிழீழ மாணவர் எழுச்சிநாள் வெள்ளிக்கிழமை கோட்ட ரீதியாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

பொன்.சிவகுமாரன், மேஜர் முரளி ஆகியோரின் நினைவாக அனுஷ்டிக்கப்படும் இந்நாள் - இம்முறையும் மிகவும் உணர்வெழுச்சியுடனும் குடாநாடு தழுவிய வகையிலும் கொண்டாடப்படவுள்ளது.

மாணவர் எழுச்சிநாளையொட்டி, கோட்ட ரீதியாக மாணவர்களுக்கிடையே பல போட்டிகளும் கலை நிகழ்வுகளும் நடைபெற்று வருகின்றன.

வெள்ளிக்கிழமை இடம்பெறும் இறுதிநாள் நிகழ்வு - பாடசாலைகளில் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டு, மாலையில் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

### விண்ணாணம் விநாசியர்



பச்சை மட்டை, போத்தல், தடி... ரொப் கிளாஸ் ரௌடிகள்!

## வல்வையில் புதிய படைமுகாம்; எதிர்த்து வீதிமறியற் போராட்டம்!

### நூற்றுக்கணக்கான பொதுமக்கள் திரண்டனர்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறைப் பகுதியில் சிதம்பராக் கல்லூரிக்கு முன்பாக, மக்கள் குடியிருப்பை அண்டிய பகுதிகளில், புதிதாக இராணுவ முகாம் அமைக்கப்படுவதனைக் கண்டித்து - நேற்றைய தினம் அப்பகுதியில் வீதி மறியற் போராட்டம் நடைபெற்றது.

வல்வெட்டித்துறைப் பகுதி பொது அமைப்புக்கள், கடற்தொழிலாளர் சங்கங்கள் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்போராட்டத்தில், பல நூற்றுக்கணக்கான பொது மக்களும், பாடசாலை மாணவர்களும் பங்கேற்றனர்.

போராட்டத்தில் கலந்துகொண்ட அனைவரும், புதிதாக அமைக்கப்பட்டுவரும் படைமுகாமுக்கு முன்பாவுள்ள, பருத்தித்துறை - காங்கேசன்துறை பிரதான வீதிக்குக் குறுக்காக அமர்ந்து, மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் - இவ்வீதியின் போக்குவரத்து சிலமணி நேரங்கள் தடைப்பட்டது.

இதேநேரம் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் - "மீனவர்களை அச்சுறுத்த மீண்டும் ஒரு படைத்தளமா?", "இயல்பு வாழ்வைக் குலைக்கவா உனது படைத்தள அமைப்பு", "குழப்பாதே குழப்பாதே கல்வியைக் குழப்பாதே", "ஒப்பந்தம் என்ன (10 ஆம் பக்கம் பார்க்க)




## முழு இடைக்கால நிர்வாகம் புலிகளுக்கு தரப்பட வேண்டும்

### பிரதமரிடம் கூட்டமைப்பு எம்.பிக்கள் வலியுறுத்து

வட - கிழக்கில், இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவது தொடர்பான அரசின் பிந்திய நிலைப்பாடு பற்றி - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நேற்றும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி கட்டமைப்புக்களுக்கு மட்டுமல்லாமல், முழுமையான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை, வடக்கு - கிழக்கில் நிச்சயமாக ஏற்படுத்த வேண்டும் என்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் - ரணில் விக்கிரமசிங்கவிடம் அப்போது வலியுறுத்திக் கூறினர். (10 ஆம் பக்கம் பார்க்க)

## பச்சைமட்டை, போத்தல்களுடன் குழுமியிருந்த இராணுவத்தினர்!

### பத்திரிகையாளர்களுக்கும் அச்சுறுத்தல்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறையில் புதிய இராணுவ முகாம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, நேற்று நடைபெற்ற மறியல் போராட்டத்தின்போது அப்பகுதிக்கு விசேட கலகம் அடக்கும் பொலிஸார் அழைக்கப்பட்டிருந்தனர்.

இந்தக் கலகம் அடக்கும் பொலிஸார் - கண்ணீர்ப்புகைக் குண்டுகள் உட்பட கலகம் அடக்கும் உபகரணங்கள் பலவற்றை தம்வசம் வைத்திருந்தனர்.

இவற்றைவிட அப்பகுதி இராணுவத்தினரும் தடி, பொல்லுகள் மற்றும் பச்சை மட்டைகள், மண் அடைக்கப்பட்ட போத்தல்கள் என்பனவற்றைத் தயாராக வைத்திருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நாடும் நடப்பும்




# மூவாயிரம் இடங்களில் மண்சரிவு அபாயம்; மக்களை பலவந்தமாக வெளியேற்ற முடிவு!

## அமைச்சர் கரு ஜெயசூரிய தகவல்

(கொழும்பு)

நாட்டில் மொத்தமாக மூவாயிரம் இடங்களில் மண்சரிவு ஏற்படும் அபாயம் இருப்பது கண்டறியப்பட்டிருப்பதாக, அனர்த்த முகாமைத்துவக் குழுவின் தலைவர், அமைச்சர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

260 இடங்கள் அதிக அபாயமுள்ள பிரதேசங்களாக இனங்காணப்பட்டிருக்கின்றன. இப்பகுதிகளில் இருந்து, பொதுமக்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

இதேவேளை - பதுளை, பரதுல்முல்லை போன்ற பகுதிகள் மண் சரிவினால் முற்றாக அழியும் ஆபத்து உள்ளபோதும், அப்பிரதேசங்களிலிருந்து மக்களை வெளியேறிச் செல்லுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு, பொதுமக்கள் செவிசாய்க்கவில்லை எனத் தெரிய வருகின்றது.

இதனால் மண்சரிவு ஏற்படும் என இனங்காணப்பட்டுள்ள ஆபத்தான பிரதேசங்களில் இருந்து, மக்களைப் பலவந்தமாக வெளியேற்றும் நடவடிக்கையை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அப்பாவி மக்கள் உயிரோடு புதையுண்டு போவதை இனிமேலும் அனுமதிக்க முடியாது. இதனால் - வீடுகளை அமைப்பதற்கு முன்னர், மண்சரிவு ஏற்படாது என உறுதிப்படுத்தாத இடங்களில் சட்டவிரோத குடியிருப்புக்கள் அமைக்கப்படுவதைத் தடுக்க சட்ட நடைமுறைகள் உருவாக்கப்படவுள்ளன எனவும் - அமைச்சர் கரு ஜெயசூரிய மேலும் தெரிவித்தார்.

# ஜனாதிபதி மாளிகையைச் சுற்றிவர பாதுகாப்பு வலயம் அமைக்கப்படும்

## திட்டத்தை சந்திரிகாவும் ஏற்றுக் கொண்டார்

(கொழும்பு)

'ஜனாதிபதி மாளிகையைச் சுற்றியுள்ள பகுதிகளில்,புதிய பாதுகாப்பு வலயமொன்றை அமைப்பது தொடர்பான திருத்தப்பட்ட யோசனைகளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஏற்றுக்கொண்டுள்ளார் என ஜனாதிபதியின் தற்காலிகச் செயலாளர் எஸ்.கருணாரட்ண தெரிவித்தார்.

புதிய பாதுகாப்பு நடைமுறைகளை உருவாக்குவது தொடர்பான திட்டத்தின்படி- ஜனாதிபதி மாளிகை, பழைய நாடாளுமன்றத்தின் சுற்று வட்டப் பகுதி ஆகியன உயர்பாதுகாப்பு வலயமாக விரைவில் பிரகடனப்படுத்தப்படவுள்ளன.

ஜனாதிபதியின் சார்பில் அவரது முன்னாள் செயலாளர் பாலபெத்தபெண்டி, ஜனாதிபதி மாளிகையைச் சூழவுள்ள பகுதியை உயர்பாதுகாப்புவலயமாகப் பிரகடனப்படுத்த வேண்டும் எனக் கோரியிருந்தார்.

இதற்கு- அரசின் சார்பில் முன்வைக்கப்பட்ட யோசனைகளை- ஜனாதிபதி சந்திரிகா நிராகரித்திருந்தார்.

இதையடுத்தே - ஜனாதிபதி மாளிகை, பழைய நாடாளுமன்றச் சுற்றுவட்டப்பகுதிகளில்,உயர் பாதுகாப்பு வலயத்தை அமைக்க அரசு மாற்று யோசனையை முன்வைத்தது குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம்களின் உரிமையை உறுதிசெய்ய வேண்டும்!

## அம்பாறை பள்ளிவாசல் சம்மேளக் கூட்டத்தில் முடிவு

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறுகின்ற சமாதானப் பேச்சுக்களிலும், நிர்வாக அமைப்புகளிலும் முஸ்லிம் மக்களுக்கு வழங்கப்படவேண்டிய உரிமையை உறுதி செய்யவேண்டுமெனக் கோரும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம், அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல் சம்மேளனத்தின் வருடாந்த கூட்டத்தில் இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சம்மேளனத்தின் தலைவர் முகைதீன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் -

அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான, சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெறவேண்டும்,

அமுலிலுள்ள யுத்தநிறுத்தம் தொடர்ந்து பேணப்படவேண்டும், அத்துடன்- நிரந்தர சமாதானம் ஏற்பட அனைத்துத்தரப்பினரும் உழைக்கவேண்டும்,

இதற்கான வழிமுறைகளை ஜனாதிபதியும், அரசாங்கமும் மேற்கொள்ளவேண்டும் எனக் கேட்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

அத்துடன்- மூன்று பிரிவுகளாக சிதறுண்டுள்ள முஸ்லிம் காங்கிரஸ் ஒன்றுபட்டு, ஒரேகுரலாக மிளிர வேண்டும். முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முக்கிய விடயங்களில் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும் எனக்கோரும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. (07)

### ஐலண்ட் செய்தியாளரை ஹக்கீம் மிரட்டியதாக புகார்

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் பத்திரிகையாளர் ஒருவரை மிரட்டியதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

அட்டாளைச்சேனையிலுள்ள, "த ஐலண்ட்" நாளிதழின் செய்தியாளர் ஏம்.எம்.ஜசீல் - அமைச்சர் ஹக்கீம் மீதான புகாரை அக்கரைப்பற்றுப் பொலிஸ் நிலையத்தில் பதிவுசெய்துள்ளார்.

கடந்த சில மாதகாலதாக - அமைச்சர் ஹக்கீம் பற்றி 'த ஐலண்ட்' நாளிதழில் வெளிவரும் செய்திகள் தொடர்பாகவே அமைச்சர் தன்னை மிரட்டியதாக ஏ.எம்.ஜசீல் புகார் செய்துள்ளார்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் நடந்த நிகழ்வொன்றை முடித்துவிட்டு வெளியேறிய சமயம் - அங்கு வந்திருந்த அமைச்சர் ஹக்கீம், மக்கள் முன்னால் வைத்து, பெரும்சத்தமிட்டு தன்னை மிரட்டியதாக ஜசீலின் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வீதிகள் குன்றும் குழியும்

தென்மராட்சி - கொடிகாமம் பகுதிகளில் உள்ள வீதிகள் நீண்டகாலமாக திருத்தப்படாமையினால், மக்கள் பெரிதும் சிரமமடைந்து வருகின்றனர். இதனால், கொடிகாமம்- கச்சாய் ஊடான யாழ்ப்பாணத்துக்கான வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் பஸ் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

# 240 அபிவிருத்தித் திட்டங்களுக்கு 43 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

'நியாப்' திட்டத்தின்கீழ் 240 அபிவிருத்தித்திட்டங்கள் வன்னியில் அமுல்செய்யப்படவுள்ளன. இதற்காக 43 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

விவசாயக் கிராமங்களை அபிவிருத்திசெய்யும் திட்டத்துக்கமைவாக 28 கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இவற்றில் சுயதொழில்வாய்ப்புத் திட்டங்களை உருவாக்குவதற்கு முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் 6.6 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஏ-9 வீதிப் போக்குவரத்தில் வேகக் கட்டுப்பாட்டை பேணுக!

## தமிழீழ காவற்துறை அறிவிப்பு

(கிளிநொச்சி)

ஏ-9 விதியில், கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற விபத்தின்போது, இரண்டுபேர் உயிரிழந்ததையடுத்து, இவ்வீதியில் போக்குவரத்தில் ஈடுபடும் மோட்டார் வாகனங்களை, வேகக் கட்டுப்பாட்டைப் பேணுமாறு தமிழீழ காவற்துறையினர் கேட்டுள்ளனர்.

கிளிநொச்சி நகருக்கும், டிப்போச் சந்திக்குமிடையில் வீதித் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இதனால், இவ்வீதியில் பயணிக்கும் வாகனங்கள் பொருத்தமான வேகக்கட்டுப்பாட்டு நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும் என்றும் தமிழீழ காவற்துறையினர் அறிவித்துள்ளனர்.

இந்தப் போக்குவரத்து விதிகளை மீறுவோர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# நில நடுக்க வதந்தியால் வீதிக்கு வந்த மக்கள்

நிலநடுக்கம் ஏற்படப்போகின்றது என்ற வதந்தியால், கொட்டாஞ்சேனை மாடிவீடுகளில் வசித்தமக்கள் வீடுகளைவிட்டு வெளியேறிய சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

கொட்டாங்சேனை ஹினி அப்புஹாமி வீதியிலே இனந்தெரியாத நபர் ஒருவரால் கிளப்பிவிடப்பட்ட - நில நடுக்கம் பற்றிய வதந்தியால், மக்கள் வீடுகளிலிருந்து வெளியேறி, வீதியில் நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுப்பிய தாய்மார்கள்-தங் கள் பிள்ளைகளுக்கு என்ன நடக்குமோ என்ற அச்சத்துடன் அழுது கொண்டிருந்தார்கள். பலர் தொலைபேசியில் தொடர்புகொண்டு தமக்கு ஏற்படப்போகும் ஆபத்துக்கள்பற்றி உறவினர்கள், நண்பர்களுக்குத் தகவல் தெரிவித்தனர்.

இலங்கையில் - இவ்வாறான நில நடுக்கம் கொட்டாஞ்சேனை முதல் மொரட்டுவ வரையில் ஏற்படுமென்றும், அது ஓகஸ்ட் முதல் டிசம்பர் மாதத்துக்குள் ஏற்படக்கூடும் என்றும் கலாநிதி லலித் ஜெயவர்த்தன என்பவர் தொலைக்காட்சிப் பேட்டியில் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இதனை வைத்துக்கொண்டே, சிலர் இந்தப் புரளியைக் கிளப்பி விட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 04 - 06 - 1950



விண்ணில் 13 - 06 - 2002

**அமரர் கந்தையா கனகரத்தினம்**

*(பூதனடைப்பு, காரைநகர்)*

எமது ஆருயிர்த் தெய்வமே
அன்பின் திருவுருவாய்
பண்பின் உறைவிடமாய்
வாழ்வின் வழிகாட்டியாய் நின்ற
எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே
ஆண்டு ஒன்று மறைந்தாலும்
ஆறாது எம் துயரம்

*பூதனடைப்பு, காரைநகர்*

(சி-1035)

என்றும் உங்கள் நினைவில்
மனைவி, பிள்ளைகள்.

## சிறு விளம்பரம்

மீசாலை வேம்பிராய் கலட்டி பூதவரதர் ஆலயத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் மாலை புதிய நேரம் 4.30 - 5.30 வரை விசேட கூட்டுப்பிரார்த்தனை நடைபெறும். இக் கூட்டுப் பிரார்த்தனையில் தவறாது மாணவ மாணவிகள் கலந்து கொள்ளவும்.

தகவல்
அடியார்கள்.

(சி-1036)

**ராஜா** யாழ்ப்பாணம்.

கடைசி வாரமாக
இளைய தளபதி விஜய், மீராஜஸ்மின், கருணாஸ்



புதிய கீதை

தினசரி 10.30, 2.30, 6.30
சனி, ஞாயிறு 10.30, 2.30, 6.30, 9.30

(சி-973)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

கமலஹாசன், மாதவன் நடித்த

**அன்பே சிவம்**

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு. 3.45 (பு.நே)
The Rock The scorpion king

(சி-9974)

## அருள் தொலைத் தொடர்பு நிலையம்

தொலைத் தொடர்பு நிலையத்தில் பணிபுரிவதற்கு யாழ்.மாநகசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் ஆண் ஒருவர் தேவைப்படுகிறார்.

*குறிப்பு:-* கணினி அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது. புதன்கிழமை (04.06.2003) மாலை 2.00-3.00 வரை தொடர்பு கொள்ளவும்.

*இல.01, பிறவுண் வீதி,*
*நாவலர் வீதிச் சந்தி,*
*யாழ்ப்பாணம்.*

(365)

## JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY VADDUKODDAI.

### VACANCIES

**INSTUCTOR / LECTURER**
(Civil Engineering)

**Qualification :-** Passed JCIT Technician Diploma or BSc.Eng or E.C.E.or NDT or any equivalent Qualification.

**Suitable candidates between age of 20 and 50 apply with full Bio - Data to**

**DIRECTOR,**
**JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY**
**VADDUKODDAI.**

on or Before 10th June 2003
T.P - 070-213139
E-mail -Jcit @ Sltnet.lk

(சி-1038)

# சந்திரிகாவுக்கு பின் ஜனாதிபதியாக அனுரா பண்டாரநாயக்க முயற்சி!

## கட்சிக்குள் தன்னை வலுப்படுத்துகிறார்



சந்திரிகா குமாரதுங்கவின் பதவிக்காலம் முடிந்த பின்னர், ஜனாதிபதி பதவியைப் பெற்றுக் கொள்வதற்காக ஆலோசனைகளை வழங்க - அவரது சகோதரர் அநுரா பண்டாரநாயக்க குழுவொன்றை அமைத்துள்ளார்.

'விசேட நடவடிக்கைக் குழு' என்ற பெயரிலான இக்குழுவில் - பேராசிரியர்கள், அரசியல்வாதிகள் அங்கம் வகிப்பதாகத் தெரியவருகின்றது.

இந்தக்குழுவே, அனுரா பண்டாரநாயக்கவுக்கு தந்திரோபாய ஆலோசனைகளை வழங்குவதோடு, அனுரா பண்டாரநாயக்கவுக்கான உரைகளையும் தயாரித்து உதவுகிறது.

அநுரா பண்டாரநாயக்கவே, பொதுஜன ஐக்கிய முன்னணி - ஜே.வி.பி. கூட்டணியின் பொதுச் செயலாளராக நியமிக்கப்படவுள்ளார். இந்தக் கூட்டணியினூடாக தனது அரசியல் 'இமேஜ்'ஐ வளர்த்துக் கொள்ளவும் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அனுரா பண்டாரநாயக்க தனது அரசியல் செல்வாக்கை வளர்த்துக்கொள்வதற்காக, இன்னொரு குழுவையும் அமைக்கவுள்ளார்.

ஊடகங்கள் மூலம் பிரசாரங்களை விரிவுபடுத்தப்படுவதற்கான இந்தக் குழுவில், பத்திரிகையாளர்கள் பலர் இடம்பெறவுள்ளனர்.

அத்துடன், சுதந்திரக் கட்சியின் மாவட்டக்கிளை அலுவலகங்களைப் புனரமைத்து, அவற்றில் தனது ஆதரவாளர்களை நியமிக்கும் நடவடிக்கைகளிலும், அனுரா பண்டாரநாயக்க ஆர்வம் காட்டிவருவதாகத் தெரியவருகிறது.

# ரோக்கியோ மாநாட்டுக்கு புலிகள்; இறுதிவரை முயற்சிகள் தொடரும்!

## அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவிப்பு

(கொழும்பு)



ரோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில், விடுதலைப் புலிகளை பங்குகொள்ள வைக்கும் முயற்சிகள் கடைசிவரை தொடரும் என, அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

இலங்கையில் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகள் பல்வேறு சிக்கல்கள் மத்தியில் மேற்கொள்ளப்படுகிறது, இந்த முயற்சிகளின்போது, இத்தகைய சிக்கல்கள் எழுவது வழமையான விடயமேயாகும். இருந்தபோதிலும், சமாதான முயற்சிகளை நம்பிக்கையுடன் மேற்கொண்டுவருவதாக, அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்தார்.

எதிர்வரும் 9 ஆம் 10 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் மாநாட்டுக்கான முன்னோடி ஏற்பாடுகளைச் செய்யும் பொருட்டு, ஜப்பானுக்கு விஜயம் செய்திருந்தபோதே அமைச்சர் மிலிந்த, அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## போலிக் கடவுச்சீட்டில்

# பெண் செயலாளரை டுபாய்க்கு கூட்டிச் சென்ற மாநகரசபை உறுப்பினர்!

## கட்டுநாயக்காவில் வைத்து கைதாகினார்

(கொழும்பு)

தனது பெண் செயலாளரை, மனைவியின் பெயரில் வெளிநாட்டுக்கு அழைத்துச் சென்ற கொழும்பு மாநகரசபை உறுப்பினரொருவர், குற்றப்புலனாய்வுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மனைவியின் கடவுச்சீட்டில் செயலாளரின் படத்தை ஒட்டி, இவர் தனது செயலாளரை டுபாய்க்கு அழைத்துச் சென்றுள்ளார். அங்கிருந்து இவர்கள் சுவிஸ்சர்லாந்துக்கு செல்ல முற்பட்டவேளை, டுபாய் விமான நிலைய அதிகாரிகள் போலிக் கடவுச்சீட்டைக் கண்டுபிடித்தனர். இது பற்றி சி.ஐ.டி.யினருக்கும் அறிவித்தனர். குறிப்பிட்ட மாநகரசபை உறுப்பினர், டுபாயிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையம் வந்தபோது, குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

தனது மனைவியின் சம்மதத்தைப் பெறாமல், செயலாளரின் படத்தை கடவுச்சீட்டில் இவர் ஒட்டியிருந்ததாகவும் - குற்றப்புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர்கள் இருவரும், நீர்கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, ஜூன் 10 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# நாடாளுமன்ற ஜனநாயகத்தை வலுப்படுத்த நிலையியற் சட்டத்தில் விரைவில் திருத்தம்!

## அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

நாடாளுமன்ற ஜனநாயக விழுமியங்களை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளில் விரைவில் திருத்தங்கள் கொண்டுவரப்படவிருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளரான பேராசிரியர் ஜீ.எல்.பீரீஸ் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடியே இறுதி முடிவு எடுப்பர். என்றாலும், நிலையியற் கட்டளைகளின் திருத்தங்கள் குறித்து நாளை ஒரு கூட்டம் இடம்பெறவிருப்பதாகவும் அவர் கூறினார்.



நாடாளுமன்ற ஜனநாயக விழுமியங்களை வலுப்படுத்தும், பிரதமரின் எண்ணக்கருவுக்கு அமையவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இத்திருத்தங்களுக்கு அமைய, 15 ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்படும். இக்குழுவுக்கு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்களே தலைமை வகிப்பர். அத்துடன் சிவில் இயக்கங்களின் பிரதிநிதிகளும் அங்கம் வகிப்பர் என்றும் கூறினார்.

எந்தவொரு விடயம் குறித்தும் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், பிரதியமைச்சர்களிடம் விளக்கம் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில், இக்குழுக்களுக்கு அதிகாரம் வழங்கப்படவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாடு முகம் கொடுக்கின்ற எல்லா சவால்களுக்கும், அரசாங்கம் மட்டுமல்லாமல் சகலகட்சிகளும் ஒற்றுமைப்பட்டு முகம் கொடுக்கவேண்டும் என்ற நோக்கிலேயே இவ் ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# கொழும்பு-தூத்துக்குடி கப்பல் சேவை உடன்படிக்கை நகல் இந்தியாவிடம்!

கொழும்புக்கும் தூத்துக்குடிக்கும் இடையிலான பயணிகள் கப்பல் போக்குவரத்தை ஆரம்பிப்பது தொடர்பாக புரிந்துணர்வு உடன்படிக்கை நகல், இந்திய அரசாங்கத்தின் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக - துறைமுக அபிவிருத்தி மற்றும் கப்பற்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்ற பின்னரே இந்த ஒப்பந்த நகல், இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. இந்திய அரசின் அங்கீகாரம் கிடைத்ததும், இரு நாட்டு கப்பற்துறை அமைச்சர்களும் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடுவர் எனத் தெரியவருகிறது.

இந்தப் பிரயாணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கான சகல முன்னேற்பாட்டு நடவடிக்கைகளும் கொழும்புத் துறைமுகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக துறைமுக அபிவிருத்தி அதிகார சபையால் கொழும்பு துறைமுகத்திலுள்ள பிரயாணிகள் மேடை நவீனமயமாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# குடாநாட்டு கிராமங்கள் தோறும் மக்கள் எழுச்சிப் பேரவைகள்

மக்கள் எழுச்சிப் பேரவை யாழ். குடாநாட்டில் பல்வேறு பகுதிகளிலும் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு வருகிறது.

இதன் முதல் கட்டமாக - யாழ். மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் உள்ள கிராமங்களில், மக்கள் எழுச்சிப் பேரவைகளை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைவாக தற்போது - யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுள்ள கிராமங்களில் மக்கள் எழுச்சிப் பேரவைகள் உருவாக்கப்பட்டு வருகிறன.

மக்கள் எழுச்சிப் பேரவைகளை அமைப்பதற்கு - கிராம மட்டங்களிலுள்ள மக்கள் தமது ஆதரவினைத் தெரிவித்து வருகின்றனர்.

## பாடசாலைக்கு சுற்றுமதில்

சங்குவேலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு - புதிதாக சுற்றுமதிலும், நுழைவாயிலும் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் வாழும் பழைய மாணவர்களின் நிதியுதவியுடன் இவ் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# இன்னுமொரு யுத்தத்தை இலங்கையர் விரும்பவில்லை

## வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)



விடுதலைப் புலிகள் - அரசாங்கத்துடனான முரண்பாடுகளை பேச்சுவார்த்தைகளின் மூலம், தீர்த்துக் கொள்வதே சிறந்தது என வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணாண்டோ தெரிவித்தார்.

லண்டன் சர்வதேச அபிவிருத்தி இராஜாங்கச் செயலாளரும், பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினருமான செலீ கீபலை, கடந்த புதன்கிழமை அவரது அலுவலகத்தில் வைத்து சந்தித்துப் பேசுகையிலே அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ இக்கருத்தைத் தெரிவித்தார்.

யுத்தக் கொடுமைகளை அறிந்து வைத்துள்ள இலங்கை மக்கள், மீண்டுமொரு யுத்தம் ஏற்படுவதை விரும்பவில்லை எனத் தெரிவித்த அவர், இலங்கையின் சமாதானத்திற்கு சர்வதேச சமூகம் காட்டிவரும் அக்கறைக்கு நன்றியும் தெரிவித்தார். இலங்கையில் சமீபத்தில் ஏற்பட்ட மண்சரிவு மற்றும் வெள்ள அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, பிரிட்டன் இரண்டு இலட்சம் பவுண்களை உதவித் தொகையாக வழங்கியமை குறித்தும், அமைச்சர் ரிரோன் பெர்ணாண்டோ தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.



வல்வெட்டித்துறையில் மக்கள் குடியிருப்பை அண்டிய பகுதிகளில் இராணுவ முகாம் அமைக்கும் நடவடிக்கையைக் கண்டித்து நேற்று நடைபெற்ற மறியற் போராட்டத்தில் பங்குபற்றுவதற்கு வருகைதரும் மாணவர்களை முதலாவது படத்திலும், மறியற் போராட்டத்தில் பங்குபற்றிய பொதுமக்களை இரண்டாவது படத்திலும், போராட்டத்தின் முடிவில் உரைநிகழ்த்தும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்: எவ்.எக்ஸ்.சுதர்சன்)

# தபாற்சேவையைச் சீரமைப்பதற்கு மக்களின் ஒத்துழைப்பும் அவசியம்!

## மாவட்ட தபால் அத்தியட்சகர் தெரிவிப்பு

இன்று தபாற்சேவை மக்களின் வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்து அத்தியாவசிய சேவையாகத் திகழ் கிறது. இத்தபால் சேவையை மக்க ளுக்குச் சிறப்பாக வழங்கவேண்டி யது தபால் திணைக்களத்தின் தலையாய கடமையாகும்.

- இவ்வாறு கரவெட்டி தபால் நிலையத்தின் அஞ்சல் ஆலோசனை சபையை அங்குரார்ப்பணம் செய்து வைத்து - உரையாற்றிய யாழ். மாவட்ட தபால் அத்தியட்சகர் எஸ்சிவ ராசசிங்கம் கூறினார்.

கரவெட்டி தபால் அதிபர். எஸ். அரியரத்தினம் தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில், தபால் அத்தி யட்சகர் சிவராசசிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது,

மக்களுக்குச் சிறந்த தபால் சேவையை வழங்குவதே தபால் திணைக்களத்தின் கடமையாகும். யுத்த அனர்த்தங்களால் சீர்குலைந்து வந்துள்ள தபால் சேவை, தற்போது படிப்படியாகச் சீர்செய்யப்பட்டு வரு கிறது. தபால் திணைக்கள உத் தியோகத்தர்கள் சேவை மனப்பான் மையுடன் செயற்பட்டால், மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கமுடியும்.

தபால் திணைக்களம் சிறந்த சேவைகளை வழங்க மக்களின் ஒத் துழைப்பு அவசியம் இருக்க வேண் டும். மக்களின் ஒத்துழைப்பு, தபால் திணைக்கள உத்தியோகத்தர்கள் சேவை மனப்பான்மையுடனும் செயற பட்டால், மக்களின் மனதைக் கவர்ந்து, சிறந்த தபாற்சேவையை வழங்கமுடியும்.

பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்காகவே, தபாலகங்கள் தோறும் அஞ்சல் ஆலோசனைச் சபை நிறுவப்பட்டு வருகிறது. இச்சபை சிறந்த தபால் சேவைகளை வழங்க தபால் திணைக்களத்திற்கு ஒத்து ழைப்பு வழங்க வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (17)

# எம்.எஸ்.எவ். மருத்துவக் குழுவினர் மந்திகையிலிருந்து திரும்புகின்றனர்!

(வடமராட்சி)

மந்திகை மருத்துவமனையில் கடந்த 16 வருடங்களாக சத்திரசிகிச் சைப் பிரிவில் சேவையாற்றிய பிரான்ஸ் நாட்டு எம்.எஸ்.எவ். மருத் துவக் குழுவினர், நாளை மறுநா ளுடன் தமது சேவையை முடித் துக் கொண்டு நாடு திரும்பவுள் ளனர்.

எம்.எஸ்.எவ். குழுவினர், 13 வரு டங்களாக மந்திகை மருத்துவ மனையில் தொடர்ச்சியாக சேவை யாற்றியுள்ளனர். இவர்கள் - வடம ராட்சி, தென்மராட்சி, வலிகாமம் மக் களுக்கு யுத்தகாலத்தில் தமது உயிரையும் துச்சமாக மதித்து, தங் கள் சேவையைத் துணிவுடன் வழங் கினர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை -பிரான்ஸ் மருத்து வர் குழுவில் கடமைபுரியும் டாக்டர் வரோனிக் என்னும் பெண் சிகிச்சை நிபுணர், இந்த அமைப்பிலிருந்து விலகி, உலக சுகாதார ஸ்தாபனத் தின் உதவியுடன் -எதிர்வரும் வெள் ளிக்கிழமை முதல் இங்கு தமது கடமையை மேற்கொள்ள நடவ டிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவ தாக, பிரான்ஸ் நாட்டு வைத்திய குழுவினர் தெரிவித்தனர். (17,13)

# இடம்பெயர்ந்தோருக்காக கட்டிய வீடுகள் இடிந்தன!

இடம்பெயர்ந்த மக்களுக்கு அமைத்துக் கொடுக்கப்பட்ட வீடுகள் இடிந்து விழுந்துள்ளன. எனினும் அவற்றிலிருந்த மக்கள் தெய்வாதீ னமாக உயிர்தப்பினர்.

இச்சம்பவம் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள -மண ற்காடு கிராமத்தில் நடைபெற்றது. இடம்பெயர்ந்த மக்களுக்கென, கடந்த வருடப் பிற்பகுதியில் மனித நேய நிறுவனமொன்றால் 30 வீடுகள் அமைககப்பட்டன. அதில் இரண்டு வீடு களே கடந்த சில தினங்களுக்கு முன் னர் இடிந்துவிழுந்துள்ளன.

மேலும், சில வீடுகள் இடிந்து விழும் நிலையிலுள்ளதாக அப் பகுதி மக்கள் அச்சம் தெரிவிக்கின் றனர். (122)

### தாவீது அடிகளாரின் உருவப் படம் திரைநீக்கம்

(கொழும்பு)

கொழும்பு தமிழ்ச் சங்கத்தில், தாவீது அடிகளாரின் திருவுருவப் படம் - கடந்த சனிக்கிழமை திரு மறைக்கலாமன்ற இயக்குநர் மரிய சேவியர் அடிகளாரால் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. (லி)

## வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

இரண்டாவது அகவையில்

பெயர் - பா.பனுசன்
முகவரி - கரம்பன் கிழக்கு, ஊர்காவற்துறை.



எட்டாவது அகவையில்



பெயர் - ஹெ.மதுஷா
முகவரி - கும்பப்பிள்ளை, இருபாலை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------

முகவரி :------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------

பெற்றார் ஒப்பம்

# சின்னஞ்சிறு செய்திகள்

### வைத்தியசாலை விடுதியில் சிரமதானம்

பளை வைத்தியசாலையில் உள்ள விடுதியை இயங்க வைப்ப தற்காக - பச்சிலைப்பள்ளி அபிவி ருத்திப் புனர்வாழ்வுக் கழகமும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும், கிராமிய அபிவிருத்திக் குழுவினரும் இணைந்து சிரமதானம் ஒன்றை மேற்கொண்டனர்.

இக்கட்டடத்தை புனரமைத்துத் தருவதாக, கிளிநொச்சி அரச அதி பர் உறுதியளித்ததுடன் -உடனடித் திருத்த வேலைகளுக்காக ஒரு தொகை நிதியையும் ஒதுக்கியுள் ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (115)

### மெய்வல்லுநர் சங்க தேசிய விளையாட்டு விழா

(பாஷையூர்)

பதுளையில் நடைபெறவுள்ள தேசிய விளையாட்டு விழாவில் பங்குபற்றுவதற்காக யாழ்ப்பாணத்தி லிருந்து, ஐந்து பேர் அடங்கிய விளையாட்டுக் குழுவொன்று பது ளைக்குப் புறப்படவுள்ளது.

தேசிய மெய்வல்லுநர் சங்கத்தி னால் நடத்தப்படும், இத்தேசிய விளையாட்டு விழா-எதிர்வரும் 6 ஆம், 7 ஆம் திகதிகளில் பதுளை யில் நடைபெறவுள்ளது. இதில் 23 வயதிற்குட்பட்டவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர் என்பது குறிப் பிடத்தக்கது. (119)

### குளங்கள் புனரமைப்பு

பளைப் பிரதேசத்திலுள்ள முகா வில்குளம், அகத்திக்குளம், முல் லையடி - கிராய்க்குளம் ஆகியன- 7 மில்லியன் ரூபா செலவில் புனர மைப்புச் செய்யப்படவுள்ளதாக கிளி நொச்சி உதவி அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (115)

### வைகாசி விசாகப் பொங்கல்

(கொடிகாமம்)

கொடிகாமம் - கச்சாய் பகுதியில அமைந்துள்ள கண்ணகை அம்மன் ஆலயத்தில், எதிர்வரும் திங்கட் கிழமை வைகாசி விசாகப் பொங்கல் விழா மிக விமரிசையாகக் கொண்டா டப்பட உள்ளது. இவ்விழாவில் நேர்த்தி செய்யும் பக்தர்களை அன் றைய தினம் மூன்று மணிக்கு முன் பாக வந்து, நேர்த்திக்கடன்களை முடிக்குமாறு ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (36)

### ஆலய மஹோற்சவம்

(நவிண்டில்)

மேலைப்புலோலி அத்தியடி பிள்ளையார் கோவில் மஹோற்சவம், நாளை மறுதினம் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாட்களுக்கு நடை பெறவுள்ளது. 13 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 14 ஆம் திகதி காலை தீர்த்தத் திருவிழாவும் நடை பெறவுள்ளது. (110)

### சிறுகதைத் தொகுதி அறிமுகவிழா

வளவை வளவனின் 'தேசத்தின் பாடல்கள்' சிறுகதைத் தொகுதி அறிமுகவிழா, எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு ஆனைப்பந்தியிலுள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறும்.

தலைமையுரையை செம்பியன் செல்வனும், அறிமுகவுரையை பொன். கணேசமூர்த்தியும், சிறப்பு ரையை யாழ். மாவட்ட அரசியற்து றைப் பொறுப்பாளர் இளம்பரிதியும், ஆய்வுரைகளை கவிஞர் சோ.பத்ம நாதனும், கலாநிதி செ.திருநாவுக் கரசும், ஏற்புரையை நூலாசிரியர் வளவை வளவனும் நிகழ்த்துவர்.

# சின்னமுத்து நோயைத் தடுப்பதற்கு இளம் பராயத்தினருக்குத் தடுப்பூசி!

(கொழும்பு)

சின்னமுத்து நோயினால் அண் மைக்காலமாக, 10 வயது முதல் 20 வயதுக்குட்பட்ட இளம் பராயத் தினர் இறப்புக்களை எதிர்கொள்வ தாக, சுகாதார அமைச்சு வட்டாரங் கள் தெரிவித்தன.

இதனால், இளம் பராயத்தினர் மத்தியில் ஏற்படும் சின்னமுத்து நோயைத் தடுக்க, இலங்கை முழுவ தும் உள்ள இளம்பராயத்தினருக்கு சின்னமுத்துத் தடுப்பூசியை போட சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

இந்த வருடம் - 10 முதல் 15 வயதுக்குட்பட்ட வயதினருக்குத் தடுப்பூசி போடப்படவுள்ளது. அடுத்த வருடம் - 16 வயதுக்கும் 20 வய துக்கும் இடைப்பட்ட வயதினருக் குத் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

இந்த வருடம் 10 முதல் 15 வயதுக்கு இடைப்பட்ட வயதினருக்கு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இந்த மாதமும், அடுத்த மாதமும் சின்னமுத்துத் தடுப்பூசி போடப்படவுள் ளது.

ஏனைய மாகாணங்களில் - செப் ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களில் சின்னமுத்துத் தடுப்பூசி போட சுகா தார அமைச்சு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இந்த வகையில், வவுனியா மாவட்டத்தில் சின்னமுத்துத் தடுப் பூசி போடும் நடவடிக்கை நேற்று ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டம், இம் மாத இறுதித்திகதி வரை செயற்ப டுத்தப்படும்.

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள சுமார் 14 ஆயிரம் மாணவர்களுக்கும், செட் டிக்குளம் பிரிவில் சுமார் 2500 மாண வர்களுக்கும், வவுனியா தெற்கு சிங் களப் பிரிவில் 1300 மாணவர்களுக் கும், வவுனியா வடக்குப் பிரிவில் 1300 மாணவர்களுக்கும் சின்னமுத் துத் தடுப்பூசி போடப்படவுள்ளது.

முன்னர் சின்னமுத்துத் தடுப்பூசி போட்ட இளம் பராயத்தினரும் இந் தத் தடுப்பூசியைப் போட்டுக்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட் டுள்ளது.

சுகாதார வைத்திய அதிகாரி கள், பொதுசுகாதார பரிசோதகர் கள், குடும்பநல மருத்துவ மாதுகள், இத்திட்டத்தை நடைமுறைப்படுத் தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கையில் முதன்முதலாக - வவுனியா மாவட்டத்திலேயே இத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# பதியப்படாத பிறப்புக்களைப் பதிய யாழ். செயலகத்தில் விசேட சேவை!

## சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும்

பதியப்படாத பிறப்புக்களைப் பதிவு செய்வது தொடர்பாக, அதே இடத்தில் சேவை - எதிர்வரும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது. பதியப்படாத பிறப்புக்களை இந்த இரு தினங்களிலும் பதிவுசெய்து, உடன் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளலாம் என, யாழ்.மாவட்ட மேலதிக உதவிப் பதிவாளர் சதா சிவ ஐயர் தெரிவித்துள்ளார்.

பிறந்த திகதியை உறுதிப்படுத் தும் வைத்தியசாலைக் கடிதம், தடுப் பூசி அட்டை, பாடசாலைக் கடிதம், சாதகம், ஞானஸ்தானச் சான்றிதழ் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன்,

பெற்றோரின் பெயர் விபரங் களை உறுதிப்படுத்தும் பெற்றோரின் பிறப்புச் சான்றிதழ், விவாகச் சான் றிதழ், ஏனைய பிள்ளைகளின் பிறப் புச் சான்றிதழ், சம்பந்தப்பட்டவர் விவாகம் செய்திருந்தால், அவரின் விவாகச் சான்றிதழ், பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ் என்பவற்றில் கைவசம் உள்ளவற்றுடனும் -

பங்கீட்டு அட்டை, தேசிய அடை யாள அட்டை, விசேட அடையாள அட்டை இருப்பின் அவற்றுடனும், தகப்பன், தாய், பிள்ளை மூவரும் தவறாது சமூகமளித்தல் வேண்டும்.

இவர்களில் யாராவது ஒருவர் வரமுடியாவிட்டால், வரமுடியாமைக் கான காரணத்தைத் தகுந்த ஆதா ரங்களுடன் உறுதிப்படுத்த வேண்டும்.

மேற்படி பதிவு செய்வதற்கான படிவங்களைத் தங்கள் பிரிவுக் கிராம சேவையாளர்களிடம் பெற்றுக் கொள்ளலாம். சேவை நடைபெறும் தினங்களில் செயலகத்திலும், விண் ணப் படிவங்களைப் பெற்றுக்கொள் ளலாம் என அவர் மேலும் தெரிவித் துள்ளார்.

# திரை விமர்சனம்

## பார்த்திபன் கனவு



மௌன ராகம், ஒருவர் வாழும் ஆலயம், ரோஜா ஆகிய படங்களுக்குப் பின்னர், தமிழ்த் திரைப்பட உலகில் கணவன் - மனைவியின் உறவைச் சொல்லும் படங்கள் பெரும்பாலும் நின்றுபோய்விட்டன.

அண்மையில் வெளியான - 'சொல்லமறந்த கதை' படத்துக்குப் பின்னர், அழகான கவிதையாக வெளிவந்திருக்கிறது 'பார்த்திபன் கனவு'.



சண்டைப் படங்களாக வெளிவந்து கொண்டிருக்கும் தமிழ் சினிமாவின் போக்கில் பார்த்திபன் கனவு என்னும் இந்தக் கவிதையைத் தந்த பழனியப்பாவுக்குப் பாராட்டுக்கள்.

தனது முதற்படத்திலேயே தனது முத்திரையைப் பதித்திருக்கும் இவர் கதையை மட்டும் நம்பி, படம் எடுத்தது சாதனைதான்.

ஸ்ரீகாந்துக்குச் சவாலுக்குரிய பாத்திரம். சிநேகாவுக்கு இரட்டை வேடம். சிநேகாவை மையமாக வைத்துத்தான் படம் நகர்கிறது. ஒரு சிநேகா ஸ்ரீகாந்தை திருமணம் செய்ய, மற்றவருடன் ஸ்ரீகாந் காதல் வயப்படுகிறார்.

தான் காதலித்த பெண்ணைவிட்டு, மற்றைய சிநேகாவுடன் வாழ்வை ஆரம்பிக்கிறார் ஸ்ரீகாந்த் இவர் அறியாமலேயே. சந்தோஷத்துடன் ஆரம்பிக்கும் அவரது வாழ்வு - தனது மனைவி, தான் காதலித்த பெண்ணல்ல என்று அறியும்போதுதான் சிக்கல் தோன்றுகிறது.

அவரால் திருமண வாழ்வைத் தொடரமுடிந்ததா? காதலியை மறந்தாரா? இங்குதான் கதை ஆரம்பமாகின்றது.

ஸ்ரீகாந்த் நடிப்பு, நடனம் அனைத்திலும் திறமையை வெளிப்படுத்துகிறார். சிநேகாவின் நடிப்பிலும் பெரும் முன்னேற்றம்.

குடும்பப் பாத்திரமான சிநேகாவின் தோற்றம் படத்துக்கு ஒரு பலம். படத்தில் விவேக்கின் பங்கும் முக்கியமானது. தனது நகைச்சுவை நடிப்பால், அனைவரையும் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்கிறார். புதிய நகைச்சுவை நடிகையாகத் தேவதர்ஷினி இந்தப் படத்தில் அறிமுகம்.

'கனாக் கண்டேன்', 'பக் ப்க்', 'என்ன தவம் செய்தேன்' என மனதில் நிற்கக்கூடிய பாடல்களைத் தருகிறார் வித்தியாசாகர். பாடல் வரிகளும் அருமை.

குறிப்பாக "பக் பக்" பாடலில் இசையும், காட்சியமைப்பும் த்மிழ்ப் படங்களுக்கு ஒரு புதுமை. அழகான கற்பனையும்கூட.

மொத்தத்தில் 'பார்த்திபன் கனவு' வரவேற்புப் பெறுகிறது.

# பஞ்சுச் சிகரம்

பல்சுவை அரங்கு

## புவியிலிருந்து செவ்வாய் செல்ல

செவ்வாய்க் கிரகத்திற்கு நேற்று அமெரிக்காவிலிருந்து புதிய விண்கலம் ஒன்று புறப்பட்டுச் சென்றது.

செவ்வாய்க்குப் போகும் திட்டத்திலுள்ள மூன்று விண்கலங்களில் இது முதலாவதாகும்.



ஐரோப்பிய விண் ஆய்வு நிறுவனத்தால் (EuroPean Space Agency) அனுப்பப்படும் இந்த விண்கலம், 'Beagle 2' என அழைக்கப்படும் கலத்தை, செவ்வாயின் தரையில் இறங்கும்.

மனிதன் அறிய மிக ஆவலாயிருக்கும் கிரகங்களில் தற்போது முக்கிய இடத்தைப் பிடிப்பது செவ்வாயே.

ஏற்கனவே - நாஸா 'Pathfi- nder' என்ற தரையிறங்கு கலத்தை 1997 இல் செவ்வாயில் இறக்கிப் பல பரிசோதனைகளை மேற்கொண்டபின் - உலகின் ஒவ்வொரு திக்கிலிருந்தும் இப்போது

## ஆறுமாதப் பயணம் ஆரம்பம்!

செவ்வாய்க்கு விண்கலங்கள் புறப்பட்டுச் செல்ல ஆரம்பித்துவிட்டன.

ஜப்பானும்கூட அடுத்த ஆணடு ஆரம்பத்தில் நோசோமி (Nozomi) என்ற விண்கலத்தைச் செவ்வாயில் தரையிறக்கத் திட்டமிட்டுவிட்டது.



செவ்வாய்க்குப் போவதென்பது மணித்தியாலக்கணக்கான பயணமல்ல. புவியிலிருந்து 250 மில்லியன் மைல்கள் (400 மில்லியன் கிலோமீற்றர்கள்) தொலைவிலுள்ள செவ்வாய்க்குப் போக ஆறு மாதங்கள் பிடிக்கும்.

செவ்வாயில் உயிர்கள் எதுவாகிலும் இருக்கிறதா என்பதுதான் 'Beagle 2' இன் முக்கிய பணியாக இருக்கும்.

செவ்வாயில் தண்ணீர் இருக்கிறதா என்பதும் இன்னொரு முக்கிய வினா. ஆனால், தண்ணீர் இருப்பதுபோலவும், திடீரென மறைந்துவிடுவதுமாக மாயா ஜாலம் காட்டுகிறதாம். இதனை 'Beagle 2' ஆராய இருக்கின்றது.

1976 இல் 'Viking' தரையிறங்கும் கலம் செவ்வாயில் இறங்கிய பின்னர், பல முயற்சிகள் தோல்வியைத் தழுவினாலும் 'Beagle 2' முயற்சி வெற்றிபெறும் என்றே விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

# உலகப் புகழ் பெற்ற இயக்குநர்கள்

## ஸ்டீபன் ஸ்பீல்பெர்க்



விருதுடன் ஸ்பீல்பெர்க்

ஸ்டீவன் ஸ்பீல்பெர்க் என்கிற இயக்குநரின் மகத்தான வெற்றிக்கு - தீங்கு விளைவிக்காத குழந்தைகளின் அறியாமைத் தன்மையும், வயதுக்கு மீறிய தீட்சண்ய புத்தியும்தான் முக்கிய காரணம் என்று கூறலாம். புகழ்பெற்ற ஆங்கில இயக்குநர் பீட்டர்பானின் பாணியைக் கதையமைப்பிலும், புகழ்பெற்ற ஹிட்ச்கொக்கின் பாணியைப் படமாக்குவதிலும் இவர் கைக்கொள்கிறார்.

தான் ஒரு திரைப்பட இயக்குநர் என்பதைவிட, ஒரு சிறந்த பொழுதுபோக்குக் கலைப் படைப்பாளி என்பதிலேயே அதிக கவனம் செலுத்துகிறார். எனவே, அவரது படங்களில் பொழுதுபோக்கு அம்சங்கள் புதிய வடிவத்துடன் வெளிப்படுகின்றன.

மிகவும் சிறுவயதிலேயே உலகத் திரையரங்கில் உன்னதமான இடம் பெற ஸ்டீவன் ஸ்பீல்பெர்க்கினால் முடிந்திருக்கிறது. இதுவரை உலகின் மிக அதிக வசூலான படங்கள் என்கிற பழைய பட்டியலை இவரது படங்கள் முற்றிலுமாக முறியடித்துள்ளன. இவரது முந்திய படங்களின் சாதனையை, இவரது பிந்திய படங்களே முறியடித்துள்ளது மற்றுமொரு சாதனை எனலாம்.

நாற்பத்தெட்டு வயதான ஸ்டீவன் ஸ்பீல்பெர்க் ஹொலிவுட் மூலம் உலகத் திரைப்பட ரசிகர்களைக் கவர்ந்துள்ளார். இவரது மற்றுமொரு சாதனை, இவ்வளவு மிகச்சிறிய வயதுக்குள்ளேயே எந்தக் காலத்திலும் நிற்கக்கூடிய மகத்தான - தரம்வாய்ந்த சிறந்த படங்களை வழங்கியிருக்கிறார் என்பதுதான்.

திரையரங்குக்கு வந்து, திரைப்படம் பார்க்கும் பெருவாரியான ரசிகர்களின் வருகை குறைந்து, விடியோ திரையுலகைத் தாக்கத் தொடங்கியபோது, ஸ்டீவன் ஸ்பீல்பெர்க் திரைப்பட ரசிகர்களை மறுபடியும் திரையரங்கை நாடச்செய்துள்ளார். அவரது படங்கள் திரையில் பிரம்மாண்டம் படைக்கும் மந்திர வித்தைகள் நிரம்பியது. சினிமாவை எப்படிக் கையாளலாம் என்பதில் ஸ்டீவன் ஸ்பீல்பெர்க் ஒரு புதிய அணுகுமுறையையே படைத்திருக்கிறார் எனலாம். ஜனரஞ்சகமும், பொழுதுபோக்குத் தன்மையும் இவரது படத்தின் உயிர்நாடியாக விளங்குவதால், ஒரு சராசரி ரசிகன் ஸ்டீவன் ஸ்பீல்பெர்க்கின் படத்தைத் தவிர்ப்பது என்பது இயலாததாகிவிடுகிறது.

1975 ஆம் ஆண்டு வெளியான ஜாஸ் (JAWS), 1977 ஆம் ஆண்டு வெளியான குளோஸ் என்கௌண்டர்ஸ ஒப் த தேர்ட் கைண்ட் (CLOSE ENCOUNTERS OF THE THIRD KIND), 1982 ஆம் ஆண்டு வெளியான த எக்ஸ்ட்ரா ரெரஸ்ரியல் (THE EXTRA TERRESTRIAL) , 1993 ஆம் ஆண்டு வெளியான ஜுராஸிக் பார்க் (JURASIC PARK), 1993 ஆம் ஆண்டு வெளியான ஷிண்ட்லேர்ஸ் லிஸ்ட் (SHINDLERS LIST) போன்றவை மேற்குறிப்பிட்ட முறையில் அமைந்த மகத்தான படங்கள் என்றே கூறலாம்.

வியாபாரரீதியிலும் தொடர்ந்து வெற்றிப் படங்களை வழங்கும் இந்த இளம் கலைஞர், வளர்ச்சியடைந்த தொழில்நுட்ப வசதிகளைத் தேவையான அளவுக்குப் பொழுதுபோக்குச் சம்பவங்களுடன் இணைத்துவிடுகிறார். எனவே, இவரது கதாபாத்திரங்கள் மிகச்சுலபத்தில் ஜனரஞ்சகத் தன்மை பெற்றுவிடுகின்றன. இவரது திரைப்படங்களில் சாதாரணமாகக் கதாநாயகன் - கதாநாயகி பின்தள்ளப்பட்டுவிடுகின்றனர் அல்லது அவர்களையும் மீறி ஸ்பீல்பெர்க்கின் ஏனைய அம்சங்கள் இடம்பிடித்துக் கொள்கின்றன எனலாம்.

தான் இயுக்கும் படத்தின் ஒவ்வொரு அசைவிலும், ஸ்பீல்பெர்க் தீவிர கவனமெடுத்துக் கொள்கிறார். ஒவ்வொரு சம்பவமும், தீவிர சிந்தனைக்குப் பிறகே வடிவம் பெறுகின்றன. பொதுவாக ஒரு



விடயத்தைக் கதையாகச் சொல்வதைவிட, படைக்கப்படும் சம்பவங்களின் அழுத்தத்தினால் வழக்கமான கதைப்போக்கு என்பதையே சுலபமாக ஒதுக்கித்



டைற்றானிக் நாயகனுடன் ஸ்பீல்பெர்க்.

தவிர்த்து விடுகிறார். இருப்பினும், இவரது படங்களில் ஒவ்வொரு கதாபாத்திரமும் மனிதர்களாக இருந்தாலும் அல்லது வேறெந்தப் பொருளாக இருப்பினும், தீவிர கண்காணிப்புக்கு உள்ளாகிப் புதுவடிவம் பெறுகின்றன. இவரது படங்களில் தவறாமல் இடம் பெறும் மற்றொரு அம்சம் குழந்தை - தாயக்கு இடையில் ஏற்படும் பாசப்பிணைப்புத் தொடர்பான சென்ரிமென்ட் காட்சிகள்.

ஸ்பீல்பெர்க்கின் வார்த்தைப் படியே கூறுவதானால்- "என்னுடைய படங்கள் வெகுசாதாரணமான மக்கள், அசாதாரணமான ஒரு விடயத்தைத் திடுமெனச் சந்திக்க நேரும்பொழுது எப்படிப்பட்ட உணர்வுகளைப் பிரதிபலிக்கிறார்கள் என்பதையே அடிப்படையாகக் கொண்டுள்ளன".

ஸ்பீல்பெர்க்கின் படங்கள் இயல்பான மனிதர்கள் நிறைந்த சூழ்நிலையில், வெகு இயல்பாக நகரத் தொடங்குகின்றன.

(தொடரும்...)

# வேண்டாம் இனி வீட்டுக்கு விலாசம்

'இனி உங்களுக்கு வீட்டு விலாசம் இருப்பது முக்கியமல்ல' என்கிறார் புகழ்பெற்ற விஞ்ஞானி ஒருவர்.

அவர் வேறு யாருமல்ல - விஞ்ஞான அறிவியலில் பரந்த அறிவும், திறமையும், கற்பனாவளமும் கொண்ட ஆதர் சி கிளார்க்தான் அவர்.



உலகின் தொழிநுட்பவளர்ச்சிக்கு அடிகோலும், ஏராளம் கண்டுபிடிப்புக்களைத் தனது கற்பனா சக்தியில் முன்னரே உருவாக்கி, அதனை நூல்களிலும் வெளியிட்ட ஆதர் சி கிளார்க் - இப்போது இணைய வழித் தொடர்புகளாலும் அதிக ஆர்வங்காட்டுகிறார்.

இணையம் மிக முதன்மையாகி விட்ட இந்த உலகில் - இனி வீட்டு விலாசங்கள் தேவையில்லை. பதிலாக மின்னஞ்சல்களே (E - mail address) போதுமென்கிறார் அவர். நொடிகளில் உலகின் பாகங்களில் இருப்போர் தொடர்புகொள்ளவும் - தேவையானவற்றை உடனடியாகவே பரிமாறிக்கொள்ளவும் வழிசெய்ய உதவும் E-mail இல்லாத உலகைப் பற்றி நான் யோசிக்கப் போவதில்லை என்றும் உறுதியாகக் கூறுகிறார் ஆதர் சி கிளார்க்.

# ஹோட்டேல்களில் மிஞ்சும் உணவில் பசளை தயாரிக்கும் ஜப்பானியர்!

ஜப்பானிய ஹோட்டேல்களில் எஞ்சியிருக்கும் உணவுப் பொருட்களை மீள்பயன்பாட்டு முறைமூலம் தாவரங்களுக்கான இயற்கை 'உரமாகத் தயாரிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டுவருகிறது.



ஜப்பானில் வருடாந்தம் 19.4 மில்லியன் தொன் உணவுப் பொருட்கள் ஹோட்டேல்களில் மிஞ்சுகின்றன. இவற்றை வெளியில் கொட்டுவதற்கு முடியாதநிலை. இதற்குக் காரணம், சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்பட்டு விடும்.

இதனால், ஜப்பானியர்கள் இந்த உணவுப் பொருட்களைத் தாவரங்களுக்கான இயற்கைப் பசளையாக மாற்றும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

ஒவ்வொரு ஹோட்டேல்களிலும் உணவுப்பொருளை இயற்கைப் பசளையாக மாற்றும் இயந்திர சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் இயற்கைப் பசளைகளை தாவரங்களுக்கு இட்டு விளைவிக்கப்படும் உணவுப்பொருட்கள் மிகுந்த சுவையாகவும் , சத்துள்ளவையாகவும் இருப்பதாக ஜப்பானிய விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.



இதேவேளை, உணவுப்பொருள் தயாரிப்பு நிறுவனங்கள் மற்றும் ஹோட்டேல்கள் அனைத்தும் உணவுப்பொருட்களை மீள் பயன்பாட்டுக்கு உட்படுத்தும் இயந்திரங்களைப் பொருத்தவேண்டும் என்று, ஜப்பானிய அரசாங்கம் புதிய சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதும் குறிப்பிடத் தக்கது.

# 'ஸ்பைடர் மான்' இனிச் சாத்தியமே!

''ஸ்பைடர் மான்'' (Spider man) பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். சுவர்களிலும், கட்டடங்களிலும் - தனது கைகளிலிருந்து கிளம்பும் சிலந்திவலையைக் கொண்டு தொங்கியவாறே சாதனை படைக்கும் கற்பனைப் பாத்திரம் அது.



ஆனால், அது நிஜமாகிவிடப் போகிறது லண்டனில். அங்குள்ள Manchester பல்கலைக்கழகத்திலுள்ள விஞ்ஞானிகள் - ஒரு வகைப் பல்லிகளின் உடலிலிருந்து வெளிவரும் பிசுபிசுப்பான, இழை போன்ற பாகுப்பொருளை வைத்து- ஸ்பைடர் மான்போல அங்கும் இங்கும் தாவமுடியும் எனக் கூறுகிறார்கள்.



இந்தப் பாகுப்பொருளிலிருந்து குறிப்பிட்ட வகை இழைகளைத் தயாரித்தால் - அது நீண்டு சென்று அங்கும் இங்கும் பாய்ந்து செல்லவும், சுவர்களில் ஒட்டிப் பிடிக்கவும் உதவும் எனப் பேராசிரியர் அந்ரே கெய்ம் (Andre Geim) கூறுகின்றார்.

பல்லி இனங்களின் கால்கள் - எவ்வாறு அவர்களைப் பற்றிப் பிடிக்கின்றனவோ - அத்தகைய நுட்பத்தை மனிதனும் பயன்படுத்திப் பார்க்கலாம் என இவர் கண்டறிகின்றார்.

இதேவேளை, இப்படியான பாகுப்பொருளை செயற்கையாகவும் தயாரிக்க, வேறுசில விஞ்ஞானிகள் திட்டமிட்டு வருகின்றனராம்.



தெற்கு இத்தாலியில் பஸ்ரரோராரோ நகரில் கின்னஸ் சாதனைக்காகத் தயாரிக்கப்பட்ட ஒரு கிலோமீற்றர் நீளமான 'சான்ட்விச்' சையே படத்தில் காண்கிறீர்கள். இந்தச் 'சான்ட்விச' தயாரிக்க - 1000 கிலோ பாண், 100 கிலோ ஜாம், தக்காளி, 200 கிலோ சொசேஜஸ், 35 கிலோ சீஸ், 200 முட்டைகள், 20 கிலோ மரக்கறி என்பன பயன்படுத்தப்பட்டன.

# வங்காளப் புலிகளுக்கு ஆபத்து!

இந்தியாவின் மேற்குவங்காள மாநிலத்தில் காட்டுப் புலிகளால் பலியாகும் மக்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது.



மாநிலத்தின் 'சுந்தர்பான்' காட்டுப் பகுதிக்குள் நுழையும் கிராமத்தவர்கள், உயிருடன் திரும்புவது பெரும்பாலும் இறைவன் கையில்தான் என்றே- அப் பகுதி வாசிகள் கூறுகின்றனர்.

இதனையடுத்து, கண்ணில் தென்படும் மிகவும் அரியவகையான 'வங்காளப் புலிகள்' (Bengal Tigers) என்னும் புலிகளைத் தாக்கி அழிப்பதில் கிராம வாசிகள் சிலர் ஈடுபட்டுள்ளனர்.

வனவிலங்குகளுக்கென்று ஒதுக்கப்பட்ட 'சுந்தர்பான்' காட்டுப் பகுதிகளுக்கு அண்மையில் பொதுமக்கள் குடியிருப்புக்களும், தொழிற்சாலைகளும் அமைக்கப்படவே - தமது சொந்த வசிப்பிடங்களிலிருந்து புலிகள் வெளியேறி, மக்கள் குடிமனைகளுக்குள் நுழைவதாகவும், மக்களைத் தாக்க முயற்சிப்பதாகவும். சுற்றுச் சூழலியலாளர்கள் கூறுகின்றனர்.

ஆனால் - மக்களுக்கோ, புலிகள் தம்மைத் தாக்கக்கூடுமென்ற அச்சம் மறையத்தானில்லை.

Royal Bengal Tigers என்னும் இந்த அரிய வகைப் புலிகளின் எண்ணிக்கை அருகிவருகிறதெனப் போராடும் சுற்றுச்சூழலியளார்கள் ஒருபுறமாகவும், மக்கள் மறுபுறமாகவும் எனச் சச்சரவு நீடித்தே செல்கிறது.



# பசியை மறக்கச் செய்யும் தாவரம் கலஹாரி பாலைவனத்தில்!



புதர் மனிதர்கள்

பசியை மறக்கச் செய்யும் மாத்திரையொன்று உலகில் விற்பனைக்கு வந்தால், அதை மில்லியன் ரூபா கணக்கில் விலைகொடுத்து வாங்கவும் ஆட்களுள்ளனர்.

ஆனால், அந்த மாத்திரையை எங்கே தேடுவது? இப்போது, அதற்கு வழிதெரிந்துவிட்டது.

யார் அந்த விஞ்ஞானி என்று கேட்கிறீர்களா? அவர்கள்- ஆபிரிக்காவின் கலஹாரி பாலைவனத்தில் வாழும் பழங்குடிகள். 'புதர் மனிதர்கள்' (Bush men) என அழைக்கப்படும் இவர்கள்தான் அந்த விஞ்ஞானிகள்.

ஆபிரிக்காவின் மிக உள்ளடங்கியிருக்கும் கலஹாரி (Kalahari) பாலைவனம் மிகப் பரந்தது. இங்கு வாழும் கள்ளி இனச்செடிகளில் ஒன்றுதான் ஹுூடியா (Hoodia). கடும் வெப்பத்தைத் தாங்கி வளரும். இது முதிர்ச்சிப் பருவமடைய பல வருடங்கள் எடுக்கும்.

இந்தத் தாவரத்தை வாயில் போட்டு அதக்கிக் கொண்டும், குதப்பிக் கொண்டும் - 'புதர் மனிதர்கள்' பசியை மறந்து நீண்டதூரம் பாலைவனத்தில் பயணிக்கின்றனராம்.

இன்று நேற்றல்ல, ஆயிரக்கணக்கான வருடங்களாக இந்தத் தாவரம் - பசியை மறக்கச் செய்துவருகின்றது.

மிகநீண்ட பயணங்கள் செல்லும்போது- உணவுப் பொருட்களைத் தூக்கிக்கொண்டு செல்லமுடியாததால்- 'ஹுூடியா' அருமருந்தாகப் போற்றப்படுகின்றது 'புதர் மனிதர்களால்'.

இந்தத் தாவரங்களை ஆராய்ந்த தென்னாபிரிக்க விஞ்ஞானிகள் - இதனை உறுதிப்படுத்தியுள்ளனர். இதன் பின்னர் நடந்ததுதான் அநியாயம்.

இந்தத் தாவரங்களின் காப்புரிமையைத் தற்போது 'Phytopharm' என்னும் மருந்துத் தயாரிப்புக் கம்பனி பெற்று - தற்போது அதனை 'Pfizer' என்னும் உலகின் இன்னொரு பெரும் மருந்து உற்பத்தி நிறுவனத்திடம் விற்றுவிட்டது.



ஹுூடியா தாவரம்

ஆனால், தென்னாபிரிக்கச் சட்டத்தரணியான Roger Chennells விடவில்லை. 'புதர் மனிதர்கள்'தான் இந்தச் சொத்துக்களுக்கு உரிமையாளர்கள் என வாதிடும் அவர் - அவர்களுக்கு இந்தக் காப்புரிமையில் வரும் கோடிக்கணக்கான டொலர் பணத்தைப் பெற்றுக் கொடுக்கப் போராடுகிறார்.

ஆனால், புதர் மனிதர்களோ - இந்தப் பயனை அனுபவிக்கத் தவறியவர்களாக - கஞ்சா, மர்ஜுவானா போன்ற போதைப் பொருட்களைப் புகைப்பதிலும், மதுபானங்களை அருந்துவதிலும்தான் நாட்டம் காட்டுகிறார்களாம். பாருங்கள் இந்த உலகை...!

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

அறிவுடையார் ஆவது அறிவார் அறிவுஇலார்
அஃதுஅறி கல்லா தவர்.

- திருக்குறள்.

# நமது நோக்கு

## தேவையின் நியாயம்!

விடுதலைப் புலிகளை - ரோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டில் பங்கேற்கவைக்க சர்வதேச அளவிலும், அரசாங்கத் தரப்பிலிருந்தும் தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

விடுதலைப் புலிகளுக்கு சாதகமான பதிலை அளிக்க வேண்டுமென - நோர்வே பிரதமரும், ஜப்பானிய - நோர்வே நாடுகளின் தூதுவர்களும் - அரசாங்கத்துக்கு வலியுறுத்தி வரும் அதேவேளை -

விடுதலைப் புலிகள் கோரிநிற்கும் இடைக்கால நிர்வாக அமைப்பிற்கான தேவையை - உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதிகளும் சுட்டிக்காட்ட ஆரம்பித்திருக்கின்றனர்.

கொழும்பில் - இலங்கையின் பொருளாதார வளர்ச்சி பற்றிய மாநாடொன்றில் பேசும்போது இவ்விடயம் பற்றிக் குறிப்பிட்ட அவர்கள்,

இலங்கை அரசாங்கத்தின் அதிகாரிகள் மற்றும் கொள்கைவகுப்பாளர்களிடையே காணப்படும் செயலாற்றலற்ற தன்மையை ஒத்துக் கொண்டிருக்கின்றனர்.

விடுதலைப் புலிகள், அரசாங்கத்தின் மாற்று யோசனையை நிராகரித்தபோது - அரசாங்கத்தின் யோசனையின்படியான வட - கிழக்கு அபிவிருத்தி அமைப்பு செயலாற்றலற்ற அரச நிறுவனங்களில் தங்கிநிற்பதால், அதுவும் செயலாற்றலைக் கொண்டிருக்கக்கூடியதல்ல என்பதை, தமது நிராகரிப்புக்கான முக்கிய காரணங்களில் ஒன்றாகக் குறிப்பிட்டிருப்பதை - உலகவங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிகளின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதிகள் அங்கு எடுத்துக்காட்டியிருக்கின்றனர். அது மெத்தச் சரியானதே எனவும் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர்.

இந்தவகையில் - விடுதலைப் புலிகள் கோரும் இடைக்கால நிர்வாக அமைப்பின் தேவையை சர்வதேசமும், உலக நிதி நிறுவனங்களும் நியாயமென ஏற்று, அதனை வலியுறுத்த ஆரம்பித்திருக்கின்ற நிலையில் -

அயல்நாடான இந்தியத் தரப்பிலோ - வழக்கமான குழறுபடிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாக அமைப்பை வழங்குவதான எந்த முயற்சியையும் தாம் கடுமையாக எதர்ப்பதாகவும்,

விடுதலைப் புலிகளிடம் முழுமையாக இடைக்கால நிர்வாகத்தை வழங்குவது நியாயமற்றது. அனைத்துத் தமிழ் அரசியற் கட்சிகளையும் இணைத்தே இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென்றும் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரக அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரிடம் தமது கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

வட - கிழக்கில் போரினால் சிதைக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்களின் வாழ்வுநிலையை எப்பாடுபட்டாவது முன்னேற்ற வேண்டுமென விடுதலைப் புலிகள் போராட,

அவ்வாறான முன்னேற்ற வழிகளுக்கு உதவ, ஆக்கபூர்வமான இடைக்கால நிர்வாக அமைப்பு புலிகளுக்கு வழங்கப்பட வேண்டுமென சர்வதேசம் கருத்துக்கொள்ள,

'மகன் இறந்தாலும் பரவாயில்லை, மருமகள் தாலியறுக்க வேண்டும்' என்பதாக -

தமிழ் மக்கள் எத்தகைய துன்பங்களைத் தொடர்ந்து அனுபவித்தாலும், அவர்கள் சுமுகவாழ்வுக்குத் திரும்பாவிட்டாலும் பரவாயில்லை - விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாக அமைப்பு கையளிக்கப்படக்கூடாது என, இந்தியத்தரப்பு ஒற்றைக்காலில் நிற்கிறது.

இங்கு - இந்தியத் தூதரக அதிகாரிகளின் இந்த வஞ்சனையான செயற்பாடு - உலக வங்கியினதும், ஆசிய அபிவிருத்தி வங்கியினதும் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதிகள் சுட்டிக்காட்டும் - இலங்கை அரச இயந்திரத்தின் மந்தமான போக்கு - இந்தியத் தூதரக அதிகாரிகளுக்கும் பொருத்தப்பாடுடையதே என்பதைத்தான் வெளிக்காட்டுகின்றது.

இந்த மந்தமான போக்கு மட்டுமல்ல, இலங்கை இனப்பிரச்சினை தீர்ந்து - அமைதிச்சூழல் இத்தீவில் உருவாகுவதற்கான தடைக்கற்களும் இந்தியத் தூதரகத் தரப்பிலிருந்து சரமாரியாகப் போடப்படுகின்றன என்ற உண்மை வெளிப்பாடும் மறுபடி உறுதியாகியிருக்கிறது.

இந்தியத்தரப்பின் கருத்து இவ்விதமிருந்து, அது அரசாங்கத்திற்கு அழுத்தம் தருவது ஒரு புறமிருக்க - விடுதலைப் புலிகளின் பங்கேற்பில்லாத ரோக்கியோ மாநாடு- எந்தளவுக்குப் பிரயோசனமானது என்ற வினாவும் சர்வதேச அரங்கில் வலுவாக எழுந்திருக்கின்றது.

வட - கிழக்கில் புனர்வாழ்வுப் பணிகளும், ஏன் அரசாங்கம் கூறிக்கொள்ளும் 'இலங்கையை மீளப்பெறுதல்' திட்டமும் நடைமுறைச் சாத்தியமாவது - விடுதலைப் புலிகளின் சமாதானப் பங்கேற்பில்தான் தங்கிநிற்க -

விடுதலைப் புலிகள் வலியுறுத்தும் இடைக்கால நிர்வாக அமைப்புக்கான நியாயத்தை, உண்மையான தேவையை உணராது, அரசாங்கம் தொடர்ந்தும் - அரசியலமைப்புக்குள்ளும், சட்டங்களுக்குள்ளும் சிக்கிக்கொண்டு - வாளாதிருக்குமாயின், அதன் விளைவுகள் இலங்கைக்கு நன்மை தரப் போவதில்லை என்பதுமட்டும் உறுதியானது.

# செயற்திறனுள்ள இடைக்கால நிர்வாகமே பேச்சுக்களைத் தொடர வழி ஏற்படுத்தும்

## யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

பேரினவாதப் போர்வெறியினால் பாதிப்புற்றுள்ள தமிழ் மக்களது, அவசர அவசிய மீள்குடியேற்ற, புனர்வாழ்வுத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக - போதிய, இறுக்கமான கட்டுக்கோப்புடன் இயங்கவல்ல, செயற்திறனுள்ள இடைக்கால நிர்வாகசபை ஒன்றினை அமைப்பதற்கான துரித செயற்பாட்டை, மனச்சுத்தியுடன் அரசு முன்னேடுப்பதுவே சமாதானப் பேச்சுவார்த்தையின் அடுத்த கட்டநகர்விற்குப் பாதையை திறந்துவிடும் என்பதே இன்றைய யதார்த்தம். அதனை அரசாங்கமும் சர்வதேச சமூகமும் புரிந்துகொண்டு செயற்படவேண்டும் என, யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

தமிழீழ விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் இணங்கிக் கொண்ட போர் நிறுத்த உடன்படிக்கையானது - வடக்குக் கிழக்கில் பாதிப்புற்ற மக்களின் வாழ்க்கையில் இயல்பு நிலையை உருவாக்குவதையே அடிநாதமாக கொண்டுள்ளது.

சிறிலங்காப் பேரினவாதத்தின் விடாப்பிடியான இனவெறிப் போக்கினால் அல்லலுற்ற எமது மக்கள், போர்நிறுத்தம் மீதும், தொடர்ந்த சமாதானத்திற்கான பேச்சுவார்த்தை முயற்சிகளிலும் பெரும் நம்பிக்கையையும், எதிர்பார்ப்பையும் கொண்டிருந்தனர். ஆனால் மீள்குடியேற்றமும், புனர்வாழ்வுக்குமான செயற்பாடுகள் எதுவுமே காத்திரமாக முன்னெடுக்கப்படாத நிலையில் - பெரும் ஏமாற்றத்துக்கு உள்ளாயினர். நம்பிக்கையீனமே விளைபயனாகியது.

சமாதான முன்முயற்சிகளில் முதன்மையானதும், தலையாய முக்கியத்துவம் வாய்ந்ததுமாகிய, மக்களின் மீள்குடியேற்றமும், இயல்புநிலைக்குத் திரும்புவதும் கானல்நீராகி விடலாம் என்ற கவலையே மிஞ்சியுள்ளது.

போர்நிறுத்த உடன்படிக்கையிலும், பேச்சுவார்த்தைகளில் இணக்கம் காணப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதிலும் அரசு தரப்பில் தயக்கமும், அசமந்தப் போக்கும் காணப்படுவது தெளிவாகவே தெரிகிறது.

எனவேதான்-

மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உடனடி மனிதாபிமான செயற்பாடுகளை எதிர்பார்த்த விடுதலைப்புலிகள், பேச்சுவார்த்தைகளின்போது, தொடர்ந்து அரசாங்கத்துக்கு விடுத்த கோரிக்கைகளுக்கு - செயற்பாடற்ற வெறும் வாக்குறுதிகளே பதிவாகிவிட்ட நிலையில், அரசாங்கத்தை செயற்பாடுகளுக்கு உந்திவிடுவதற்கான கால அவகாசத்தை வழங்குவதற்காகவே, சமாதானப் பேச்சுவார்த்தையின் தொடரும் நகர்வுகளில் இருந்து தற்காலிகமாக இடைவிலகிக் கொள்வது என்ற முடிவை எடுத்தனர்.

ரோக்கியோ உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டில், விடுதலைப் புலிகளை கலந்துகொள்ளச் செய்வதில் சர்வதேச சமூகம் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஆனால் பாதிப்புற்ற தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் நடைமுறையிலான மக்கள் நலனோம்பும் இயல்புவாழ்க்கைக்கு திரும்புதல் என்பது விரைவாக நிறைவேற்றப்படுதலே, தமிழ் மக்களது கௌரவத்திற்கும், பாதுகாப்பான சுதந்திரமான வாழ்க்கைக்கும் வழிகோலும். சமாதானப் பேச்சுவார்த்தையின் அடுத்த கட்ட நகரவினைச் சாத்தியமாக்கும். கடந்த பேச்சுவார்த்தைகளின்போது விதந்துரைக்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ள அவரச மனிதாபின மற்றும் புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ளுவதற்கான உப குழுவினை, (சிறான்) மக்கள் பெரும் எதிர்பார்ப்புடன் வரவேற்கவே செய்தனர். ஆனால் இக்குழு, தான் திட்டமிட்ட தீர்மானங்களை செயற்படுத்த முடியாத கையறுநிலையை அடைந்துவிட்டது. தேங்கிவிட்ட அமைப்பாகிவிட்டது.

சமாதான முயற்சிகளுக்குப் பெரும் ஆதரவினை பல நாடுகளும், அனைத்துலக அமைப்புகளும் தந்ததுடன், நிதி மற்றும் செயற்படுகைக்கான ஒத்துழைப்பை வழங்க முன்வந்தனர். ஆனால் சிறான் அமைப்போ செயற்திறன் முடக்கப்பட்டு செயலிழந்துவிட்டது. ஏனெனில், சிறானுக்கு செயற்படுத்துவதற்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. சட்டப்பிரச்சனை என்று சிறிலங்கா அரசாங்கத்தால் காரணம் கூறப்படுகிறது.

ஆகையினால், எம்முன்னால் எழுந்து நிற்கும் பெரும் கேள்வி இதுதான். நிதி வழங்கும் நாடுகளும், அமைப்புகளும் கூடவுள்ள ரோக்கியோ மகாநாட்டில் ஒட்டுமொத்த விளைபலன் தமிழ்மக்களைச் சென்றடையுமா?

எனவேதான், போதிய நிதி நிர்வாக அதிகாரங்களுடன் கூடிய இடைக்கால நிர்வாக சபையினை, விடுதலைப்புலிகள் முன்மொழிந்தனர்.பதவியில் இருக்கும் அரசாங்கம் - இடைகால நிர்வாகசபையை தமது தேர்தல் அறிக்கையில், முக்கிய அம்சமாக வெளியிட்டு, அதற்கான மக்கள் ஆணையைப் பெற்றுள்ளது.

எனவே, பெரும்பான்மை மக்களும் இடைக்கால நிர்வாக சபையை அங்கீகரித்துள்ளனர். ஆனால், அரசாங்கமோ போதிய அதிகாரங்களோ அல்லது நடைமுறைச் சாத்தியப்பாடோ அற்ற குழப்பகரமான, தெளிவற்ற வரைபுகளுடனான அமைப்பொன்றையே முன்மொழிந்துள்ளது.

அபிவிருத்திக் கவுன்சில் எனப்படும் இந்த முன்மொழிவு, மக்களுக்கு எந்த விடிவையும் தரப்போவதில்லை. இந்த அமைப்புக்கு எதுவித நிறைவேற்று அதிகாரமும் இல்லை. ஆகையினால், குறைபாடுகள் உள்ள இந்த அபிவிருத்திக் கவுன்சிலை விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ளனர்.

சமாதானப் பேச்சுவார்த்தை என்ற ஒரு வகைப்பட்ட மாய உருவத் தோற்றத்தினை வளர்த்துவிடுவதன் மூலம்- அரசாங்கமானது தான் எதிர்நோக்கும் அரசியல், பொருண்மிய நெருக்கடிகளை சமாளிக்க முயல்வதாகவே கருதவேண்டிய கவலைக்குரிய சூழ்நிலை தோன்றிவிட்டது. அத்துடன் பெறப்படும் நிதியின் பெரும்பகுதியை தென்னிலங்கையின் அபிவிருத்திக்கென ஒதுக்கி வலுப்பெறவும் செயற்படுகிறது என்பது புலனாகிறது என, அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வர்த்தகப் பிரிவில் மகளுக்கு அனுமதியில்லை

# பாடசாலை முன்பாக தன்னைத்தானே தீமூட்டி எரித்துக் கொண்ட தந்தை!

(கொழும்பு)

பாடசாலையொன்றில், தனது மகளுக்கு வர்த்தகப் பாடப்பிரிவில் கல்வி கற்க அனுமதி வழங்கப்படாததால், 37 வயதுடைய தந்தையொருவர் - பாடசாலை முன்பாக தனக்குத் தானே மண்ணெண்ணெய் ஊற்றித் தீமூட்டி எரித்தார்.

இச்சம்பவம் - கொலன்னாவவில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது,

கொலன்னாவவில் பலசரக்குக் கடை ஒன்றை வைத்திருக்கும் 37 வயதான பியால் உதயகுமார, தனது மகள் நதீகா சேவந்திக்கு - கொலன்னாவ பாலிகா வித்தியாலயத்தில், வர்த்தகப் பிரிவில் கல்வி கற்க அனுமதி கோரியிருந்தார்.

ஆனால், பாடசாலை அதிபர் மேற்படி மாணவிக்கு கலைப் பிரிவில்தான் அனுமதி வழங்கினார். வர்த்தகப்பிரிவில் தனது மகளுக்கு அனுமதி வழங்கும்படி மாணவியின் - தந்தை, தாய் ஆகியோர் அதிபரிடம் கெஞ்சியபோதும், அனுமதி வழங்கப்படவில்லை. வர்த்தகப்பிரிவுக்கு போதியளவு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுவிட்டதாக அதிபர் கூறினார்.

இந்த விடயத்தை மாணவியின் தந்தை, கல்வி அதிகாரிகளிடம் எடுத்துக்கூறியபோதும் - எந்தவிதப் பயனும் கிடைக்கவில்லை.

இதனால், விரக்தியடைந்த நிலையில் காணப்பட்ட மாணவியின் தந்தையான உதயகுமார, கொலன்னாவ பாலிகா வித்தியாலயம் முன்பாக தனக்குத்தானே தீமூட்டி எரித்து, தற்கொலை செய்துகொண்டார்.

# வட - கிழக்கு உள்ளூராட்சி தேர்தல் ஒத்திவைக்க அரசாங்கம் முயற்சி!

## திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பகுதிகளில் உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரிய வருகிறது. இதற்காக உள்ளூராட்சி மன்ற திருத்தச் சட்ட மூலத்தினை, அரசாங்கம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது.

இந்த உள்ளூராட்சி மன்ற திருத்தச் சட்ட மூலம், எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர்- நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, வாக்கெடுப்புக்கு விடப்படும் என்று - உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் அலவி மௌலான தெரிவித்துள்ளார்.

வட - கிழக்குப் பகுதியிலுள்ள உள்ளூராட்சிச் சபைகளுககு - எதிர்வரும் 25 ஆம் திகதி, தேர்தல் நடத்தப்படுவதற்கான ஏற்பாடுகளைத் தேர்தல் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திருத்தச் சட்ட மூலம் நிறைவேற்றப்படாவிட்டால், எதிர்வரும் 25 ஆம் திகதி திட்டமிட்டபடி வட-கிழக்கில் தேர்தல் நடத்தப்படுமென்று உதவித் தேர்தல் ஆணையாளர் அருந்தவச்செல்வம் தெரிவித்தார்.

இந்த நிலையில்தான், எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சிமன்ற திருத்தச் சட்ட மூலம், நாடாளுமன்ற விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுமென - அமைச்சர் அலவி மௌலானா தெரிவித்தார்.

இச்சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டால், ஏற்கனவே ஏற்கப்பட்ட நியமனப் பத்திரங்கள் ரத்துச் செய்யப்பட்டு, புதிய வேட்பு மனுக்கள் கோரப்படுமெனவும், அவர் மேலும் குறிப்பிட்டார்.

# கேட்டால் கிடைக்காது; தட்டினால்தான் கிடைக்கும்!

வடக்கு - கிழக்குக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று அவசியம் வேண்டும் என்று விடுதலைப் புலிகள் விடுத்த கோரிக்கையை, ரணில் விக்கிரமசிங்க தலை


டட்லி சேனநாயக்க

மையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு நிராகரித்துவிட்டது.

இதற்குப் பதிலாக அபிவிருத்திச் சபை என்ற ஒரு சபையை அமைக்கலாம் என்று அரசு புதிய யோசனையை முன்வைத்தது. இதை விடுதலைப் புலிகள் நிராகரித்துவிட்டனர்.

இந்த இரண்டு யோசனைகளையும் இருதரப்பும் நிராகரித்தமை ஆச்சரியத்துக்குரிய விடயமல்ல.

இலங்கை சுதந்திரம் பெற்றபின், தமிழ்மக்கள் சார்பில் முன்வைத்த எந்தக் கோரிக்கையைத்தான், ஆட்சி பீடத்துக்கு வந்த சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகள் ஏற்றுக்கொண்டன.

இலங்கைக்கு சுதந்திரம் வழங்குவதற்கு முன் அரசியல் சீர்திருத்தம் பற்றி ஆராயவந்த ஆணைக்குழுவிடம், இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழ்மக்களுக்குச் சமபலப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம் கோரி வாதாடினார். இதை ஐம்பதுக்கு ஐம்பது என்று சொல்லிச் சிங்களத் தலைவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தனர்.

இந்தக் கோரிக்கையை முன்வைத்த வந்த ஜி.ஜி.பொன்னம்பலத்தையே பின்னர் தாங்கள் அரசின் பக்கம் வளைத்தெடுத்துவிட்டதாகச் சிங்களத் தலைவர்கள் சொல்லிக் கொண்டனர்.

இதன்பின் தமிழ்க் காங்கிரஸிலிருந்து பிரிந்து இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியை அமைத்த - எஸ்.ஜே.வி.செல்வநாயகம், கு.வன்னியசிங்கம், டாக்டர் இ.மு.வி.நாகநாதன் போன்றவர்கள் இலங்கையில் தமிழர்கள் சுயமரியாதையுடன், உரிமையோடு பாதுகாப்பாக வாழ்வதற்கு இணைப்பாட்சி என்ற சமஷ்டி ஆட்சி அமைப்பு வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தனர்.


ஜி.ஜி.பொன்னம்பலம்

இக்கோரிக்கைக்கு ஜனநாயக முறையில் மக்களின் ஆணையைக் கோரித் தேர்தல்களில் போட்டியிட்டு மக்கள் ஆணையையும் பெற்றனர். இதேசமயம், இக்கோரிக்கையைப் பெறுவதற்காகக் காந்திய வழியில் சாத்வீகப் போராட்டங்களையும் நடத்தினர்.

சிங்களம் மட்டும் உத்தியோக மொழி என்ற சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றிய இன்றைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் தகப்பன் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க தமிழரசுக் கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். 1957 ஆம் ஆண்டில் சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்து, தமிழ்மக்களின் உரிமைகளைப் பெறுவதற்காக மாபெரும் சாத்வீகப் போராட்டத்தை நடத்துவதற்குத் திருகோணமலையில் கூட்டமொன்றைக் கூட்ட தமிழரசுக் கட்சி தீர்மானித்தது.

**எஸ்.எம்.ஜி**

திருமலை மாநாட்டுக்கு வடக்கு - கிழக்கின் மூலைமுடுக்குகளிலிருந்தெல்லாம் மக்கள் பாதயாத்திரையாகத் திரண்டனர்.

இந்நிலையில், பிரதமர் பண்டாரநாயக்க, தமிழரசுத் தந்தை செல்வநாயகத்துடன் இரவு - பகலாகப் பேச்சு நடத்தினார். முடிவில் இருவரும் ஒரு உடன்பாட்டுக்கு வந்து ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டனர்.

பண்டா - செல்வா ஒப்பந்தம் சமஷ்டி ஆட்சிக்குப் பதிலாக வடக்கில் ஒரு பிரதேசசபையும், கிழக்கில் ஒன்றுக்கு மேற்பட்ட பிரதேசசபைகளை அமைப்பதற்கும், இந்தப் பிரதேச சபைகள் தாம் ஒன்றாக இணைந்து ஒரே பிரதேச சபையாகச் செயற்படுவதற்குத் தீர்மானித்தால், அவ்விதம் செயற்படலாமென்றும் கூறியது.

தமிழ்மக்களின் கல்வி, காணி, குடியேற்றம் முதலியன முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் அதிகாரம் பிரதேச சபைகளிடம் ஒப்படைப்பதற்கு இந்த ஒப்பந்தம் வழி செய்தது.

இந்த பண்டா - செல்வா ஒப்பந்தத்தை ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி கடுமையாக எதிர்த்தது. புத்த


பண்டாரநாயக்க

பிக்குகள் ஆர்ப்பாட்டத்திலிறங்கினர். ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கண்டிக்குப் புனித யாத்திரை மேற்கொண்டார். பண்டாரநாயக்கவின் ஆளும் கட்சிக்குள்ளிருந்தவர்கள் சிலரும் இதை எதிர்த்தனர். பண்டாரநாயக்கவின் வீட்டு வாசலிலேயே புத்தபிக்குகளும், ஆளும்கட்சியைச் சேர்ந்தவர்களும் மறியல் செய்தனர்.

ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட பிரதமர் பண்டாரநாயக்கவே, பண்டா-செல்வா ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்தார்.

(தொடரும்.....)

# ரணிலுடனான உறவை முறித்து ஜே.வி.பியுடன் உறவு வளர்க்கும் சந்திரிகா

**தெற்குத் திசையினிலே....**

**கொழும்பிலிருந்து இந்திரஜித்**

இலங்கையின் மத்திய அரசியல் கடந்த இரண்டு மாதங்களாக பதற்றநிலையில் இருந்து வருகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் போர்நிறுத்த உடன்பாடு செய்து கொள்ளப்பட்ட பின்னர், தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையிலிருந்து தற்காலிக விலகலை மேற்கொண்டமையை அடுத்தே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் மாறிமாறி வரும் அரசாங்கங்கள், தமிழ்மக்களின் அபிலாஷைகளுக்கு உரிய மதிப்புக் கொடுப்பதில்லை. இதன் காரணமாகவே - இலங்கையில் இனப்பிரச்சினை கடந்த இருபது வருடங்களாக உச்சநிலையிலிருந்து வருகின்றது. இதனைத் தீர்ப்பதற்கு அவ்வப்போது அரசாங்கங்கள் முயன்றபோதும், சிங்கள இனவாதம் அதற்கு இடங்கொடுக்கவில்லை அல்லது தேசியநலன் என்ற விடயத்தில் அந்த அரசாங்கம் தனது கவனத்தைச் செலுத்துவதில்லை. இதனால், சமாதான முயற்சிகள் ஒவ்வொன்றும் தகர்ந்துபோயின. இதன் காரணமாக - போர் முன்னெடுப்புக்கள் மீண்டும் மீண்டும் மேற்கொள்ளப்பட்டன. இதில் பல்லாயிரக்கணக்கான மனித உயிர்கள் பலியாக்கப்பட்டன.

மறுபுறம், இலங்கை இராணுவம் பல்வேறு நாடுகளின் உதவியுடன் தன்னை வளர்த்துக் கொண்டது. தமிழீழ விடுதலைப் புலிகளும் தமது போராட்டத்தில், இலங்கை இராணுவத்திற்கு நிகரான சமநிலைப்


ஜே.வி.பி தலைவர்கள் - நந்தன குணரட்ண, ரில்வின் சில்வா, விமல் வீரவன்ச.

படையினராகத் தம்மை வளர்த்துக் கொண்டனர். குறிப்பிட்ட இரண்டு தரப்பினரும் தம்மை இராணுவ ரீதியில் உச்சநிலைப்படுத்திக் கொண்ட - நிலையில் போர் தீவிரமானது. யுத்தம் பல ஆண்டுகளாகத் தொடர்ந்தது.

இந்த நிலை தொடர்ந்து கொண்டு இருக்கும்போது, புதிதாகப் பதவிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டு, சமாதான முன்னெடுப்பை ஆரம்பித்தது. எனினும், இன்று இந்தச் சமாதான முன்னெடுப்பும், தடங்கல் நிலையை அடைந்துள்ளது. கடந்த பொதுத்தேர்தல் காலப்பகுதியில் ரணில் - பிரபா கூட்டு ஒப்பந்தம் அல்லது அலி (யானை), கொட்டி (புலி) ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டதாகப் பொதுஜன ஐக்கிய முன்னணி தெரிவித்தது.

இதன் அடிப்படையிலேயே, அந்தக் கட்சியின் தேர்தல் பிரசாரமும் அமைந்திருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரமுகர் லோறன்ஸ் திலகரும், ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்க அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவும் தொலைபேசியில் பேசிக்கொண்டதாகக் கூறப்படும் ஒரு ஒலிப்பேழையை, பொதுஜன ஐக்கிய முன்னணி தமது பிரசாரத்திற்காகப் பயன்படுத்தியது. ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்த பின்னர், தமிழீழ விடுதலைப் புலிகள் - தமிழீழக் கனவை நனவாக்கிக் கொள்ளப் போகிறார்கள் என்றே பொதுஜன ஐக்கிய முன்னணி தமது தேர்தல் பிரசாரத்தில் குறிப்பிட்டு வந்தது.

எனினும், இந்த பிரசாரங்கள் தென்னிலங்கை மக்கள் மத்தியில் பெரிதாக எடுபடவில்லை. அவர்கள் - ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதம மந்திரியாக ஆட்சியில் அமர்த்தினர். என்றாலும், அவருக்கு நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையைத் தென்னிலங்கை மக்கள் வழங்கவில்லை. இந்தக் கட்டத்தில், தான் ஆட்சிக்கு வந்தபோதும், ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்திற்குப் பதில் சொல்லவேண்டிய நிலைக்கு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தள்ளப்பட்டது.

இந்த நிலையில்தான், தென்னிலங்கையில் இன்று அரசியலமைப்பு தொடர்பில் பாரிய சர்ச்சைகள் இடம் பெற்றுவருகின்றன. காலத்துக்குக் காலம் பதவிக்கு வந்த அரசாங்கங்கள் தமது நலனுக்கு ஏற்படுத்திக் கொண்ட அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் இன்று நடைமுறைச் சிக்கல்களை தோற்றுவித்துள்ளன. இலங்கையின் அரசியல் அமைப்பில் ஜனாதிபதிக்கு நிறைவேற்று அதிகாரம் இருப்பதாகவும், அவர் சர்வாதிகாரியாகக்கூடச் செயற்படலாம் என்றும், வெகுவான நிலைப்பாடு மக்கள் மத்தியில் நிலவியது. ஆனால், கடந்த மாதம் இடம்பெற்ற அபிவிருத்தி லொத்தர் சபை கையேற்பு விடயத்துடன் அதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டது. தனிநிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி அபிவிருத்தி லொத்தர் சபையைக் கையேற்ற ஜனாதிபதி அதனை வர்த்தமானியின் மூலம் பிரகடனப்படுத்துவதற்கு இலங்கையின் அரசியலமைப்பு வழிசெய்யவில்லை.

அரசியல் அமைப்பின் 48 ஆவது பந்தியின்படி நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி, அரசாங்கத்திற்குள் மாற்றங்களை ஏற்படுத்தும் போது, பிரதம மந்திரியுடன் கலந்தாலோசிக்கவேண்டும் என்ற கருத்து குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைவாகவே நிறைவேற்று அதிகாரத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ஏதாவது தீர்மானம் ஒன்றை


சந்திரிகா

நிறைவேற்றும் முன்னர், தமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் பதவி விலகல் கடிதங்களைப் பெற்றுக்கொள்வார் என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. இருப்பினும், தற்போதைய அரசியற்சூழ்நிலையில் அவ்வாறான வாய்ப்பு ஒன்றுக்கும் இடமில்லை. நாளைய தினம் ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைக்க முயற்சித்தால் அவரால் வர்த்தமானிப் பிரகடனத்தை வெளியிட முடியுமா? என்ற சந்தேகத்தின் மத்தியிலேயே இலங்கையின் அரசியலமைப்பு நடைமுறையில் இருக்கிறது.

இது இவ்வாறிருக்க, தென்னிலங்கையின் அரசியல் இடர்களுக்குள் இருந்துவரும் முரண்பாடுகளையும் கவனிப்போம். பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் - மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் ஏற்படப்போவதாகக் கூறப்படும் கூட்டணி பற்றிக் கடந்தவாரம் குறிப்பிட்டபோது, பொதுச் செயலாளர் பதவியில் இருதரப்புக்கும் இடையில் முறுகல்நிலை இருப்பதாக குறிப்பிட்டிருந்தேன்.

இந்த முறுகல்நிலைக்கான காரணத்தை இப்போது பார்ப்போம். குறிப்பிட்ட கூட்டுமுன்னணிக்குள் ஒதுக்கப்படும் பதவிகள் குறித்து ஆலோசனைகள் முன்வைக்கப் பட்டுள்ளன. இதன்படி - முன்னணியின் தலைவியாக ஜனாதிபதி சந்திரிகாவை இருதரப்பும் ஏற்றுக் கொண்டுள்ளன. உபதலைவராக, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரான சோமவன்ச அமரசிங்கவின் பெயர் பிரேரிக்கப்பட்டுள்ளது. ஆனால், பொதுச் செயலாளராக அநுரா பண்டாரநாயக்க பிரேரிக்கப் பட்ட விடயத்திலேயே முறுகல் தோன்றியுள்ளது. இந்தப் பதவி நிலையை மக்கள் விடுதலை முன்னணி கோரி நிற்கிறது. இதற்கு அப்பால் முன்னணியின் பிரசார செயலர்களாக - விமல் வீரவன்ச மற்றும் மங்கள சமரவீர ஆகியோர் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வா மற்றும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம ஆகியோர் முக்கிய பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள விரும்புகின்ற போதும், அந்த பதவிகள் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. இதற்குள் உத்தேச கூட்டு முன்னணி ஏற்கனவே மேற்கொண்ட பொருளாதாரம் தொடர்பான இணக்கம், மக்கள் விடுதலை முன்னணியின் நிறைவேற்றுக் குழுவினால் நிராகரிக்கப்பட்டது. தனியார்மயக் கொள்கையை 50 சதவீதத்தினால் ஏற்றுக்கொள்வது என முன்னர் உத்தேச கூட்டு முன்னணியால் சம்மதம் தெரிவிக்கப் பட்டிருந்தது.

எனினும், இது எமது இடதுசாரிக் கொள்கைக்கு ஏற்புடையதல்ல எனக்கூறி மக்கள் விடுதலை முன்னணி இதனை நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவில் கடும் வெப்பம்; ஆயிரம் பேர் வரையில் பலி!



வெயில் நீங்கி, மழைவரப் பிரார்த்தனை.

இந்தியாவில்- கடும் வெப்பத்தால் பலியானோரின் எண்ணிக்கை ஆயிரத்தை எட்டியுள்ளது.

இந்தியாவின் தென் மாநிலமான ஆந்திராவிலேயே அதிகமானோர் பலியாகியிருக்கின்றனர். இங்கு கடந்த ஞாயிறன்று வெப்பநிலை 50 பாகை செல்சியஸை எட்டியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டும் இதே காலப்பகுதியில் கடும் வெப்பத்திற்கு ஆயிரம் பேர்வரை பலியானமை குறிப்பிடத்தக்கது.

ஆந்திராவில் - நல்கொண்டா மாவட்டத்தில் மட்டும் இம்முறை 204 பேர் இறந்திருக்கின்றனர். ஆந்திரத் தலைநகர் ஹைதராபாத்தில் - கடும் வெப்பத்தால் மக்கள் வெளியில் திரியாமல் வீடுகளுக்குள் முடங்கியே கிடக்கின்றனர்.

இந்தக் காலநிலை இன்னும் சில தினங்களுக்குத் தொடருமென - ஆந்திர மாநில அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை -

கடும் வெயிலிலிருந்து மக்கள் தம்மை எவ்வாறு பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பதை விளக்குவதற்கான பகிரங்கக் கூட்டங்களையும் அரசாங்க அதிகாரிகள் பரவலாக நடத்திவருகின்றனர்.

மக்களைக் காலை பத்து மணிக்கும், மாலை ஐந்து மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் வெளியில் திரிய வேண்டாம் எனவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை -

வட இந்திய மாநிலமான ராஜஸ்தானும் கடும் வெப்பத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது. அங்குள்ள 32 மாவட்டங்களும், வரட்சிப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

# ஈராக் போருக்குப் பின்னர் புஷ் -ஷிராக் முதற்சந்திப்பு!

## ஜி-8 உயர் மாநாட்டில் நடந்தது



ஈராக் மீதான அமெரிக்கப் போருக்கு கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்துவந்த பிரான்ஸ் ஜனாதிபதி ஜக்வெஸ் ஷிராக்கும் - அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும், ஜி-8 உயர் மாநாட்டில் நேருக்குநேர் சந்தித்துப் பேசியுள்ளனர்.

பிரான்ஸின் ஈவியன் நகரில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான, ஜி-8 அமைப்பின் உயர்மட்ட மாநாட்டின் தொடக்க நிகழ்விற்குப் பின்னர், இவர்கள் இருவரும் நேருக்குநேர் சந்தித்தனர்.

அரைமணிநேரம் நடைபெற்ற இச்சந்திப்புப் பற்றிக் குறிப்பிட்ட அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ், எதிரெதிர் நிலைப்பாடுகளில் இருந்த நானும் ஷிராக்கும் எவ்விதம் ஒன்றாக அமர்ந்து சுமுகமாகப் பேசுவோம் என இரண்டு நாடுகளிலுமுள்ள பெருமளவு மக்கள் ஆச்சரியப்பட்டிருந்தனர். ஆனால், நாம் இன்று இணக்கமாகப் பேசியிருக்கிறோம் என்றார்.

இதேவேளை, ஜி-8 மாநாட்டை எதிர்க்கும் ஆர்ப்பாட்டக்காரர்கள், நேற்றும் தமது எதிர்ப்புப் பேரணிகளை பிரான்ஸில் நடத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அணுவாயுத பரிசோதனைக்கு இடமளிக்கப் போவதில்லை!

## ஈரானிய அரசாங்கம் உறுதிபட அறிவிப்பு

அணு ஆயுதப் பரிசோதனை முயற்சிகளைத் தடுக்கும் சர்வதேச ஒப்பந்தத்தில், எக்காரணம் கொண்டும் கைச்சாத்திடப் போவதில்லை எனவும், அணு ஆயுதப் பரிசோதனைகளை தனது நாட்டுக்குள் அனுமதிக்கப் போவதில்லை எனவும் ஈரானிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை-

அணுசக்தியை அமைதிவழிகளுக்குப் பயன்படுத்தும் அணு நிலைகளை ஈரானில் அமைப்பதற்கான அழைப்பை- அமெரிக்காவிற்கு அந்நாடு மீண்டும் விடுத்தது.

இவ்வாறு முன்னரும் ஈரான் அழைப்பு விடுத்திருந்தபோதும் - அதனை அமெரிக்கா நிராகரித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இத்தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஈரானிய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஹமீட்- ரிஸா அசெவ்வி,

அமைதி முயற்சிகளுக்கும், சக்தி பிறப்பாக்கலுக்குமான அணுசக்தி நிலையங்களை ஈரானில் அமைக்க, அமெரிக்கா முன்வருமானால் அதனைத் தாம் மனப்பூர்வமாக ஏற்பதாகக் கூறினார்.

இதேவேளை -

சர்வதேச அணுசக்தி ஏஜென்சி தனது அறிக்கையில், ஈரானிய அணுசக்தி மையங்கள் அவசியம் பார்வையிடப்பட வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# நேபாள அரசர் படுகொலை நினைவுநாள் அனுஷ்டிப்பு!



நேபாள அரசராயிருந்த பிரேந்திராவும் அரச குடும்பத்தினர் பலரும் - மதுபோதையிலிருந்த இளவரசர் திபேந்திராவினால் கொடூரமாகச் சுட்டுக்கொல்லப்பட்டதன், இரண்டாவது ஆண்டு நினைவுதினம் நேற்று காட்மண்டுவில் அனுஷ்டிக்கப்பட்டது.

அரசரையும் ஏனையோரையும் சுட்டுக்கொன்ற இளவரசன் - பின்னர் சூட்டுக்காயங்களுடன் இறந்திருக்கக் காணப்பட்டார். இவர், தற்கொலை செய்துகொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்குப் பின்னர் புதிய அரசராக முடிசூட்டிக்கொண்ட ஜியானேந்திரா - இன்று நேபாளத்தை ஆண்டுவருகிறார்.

முன்னாள் அரசர் பிரேந்திராவினதும் குடும்பத்தவர்களதும் நினைவுச் சடங்குகள், நேற்று அரச மரியாதையுடன் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை, நேபாளப் பிரதமர் லோகேந்திரா பகதூர் சாண்ட், பதவியிலிருந்து இராஜினாமாச் செய்திருப்பதால் - நேபாளத்தில் அரசியல் நெருக்கடி தீவிரம் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# மக்கள் - கடற்படையினர் வத்தளையில் மோதல்

## வீடுகள், வாகனங்கள் சேதம்

(கொழும்பு)

வத்தளை - மாபொலவில், கடற்படையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் 2 வீடுகளும், 2 வாகனங்களும் சேதமாகியதுடன் நான்கு பேர் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு, கடற்படையைச் சேர்ந்த இருவர் ஹோட்டேல் ஒன்றுக்குச் சென்றபோது, அங்கு வாக்குவாதம் ஏற்பட்டு - அது மோதலில் முடிந்தது.

இச்சம்பவத்தில் காயமடைந்த இரண்டு கடற்படையினர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவத்தைக் கேள்வியுற்ற கடற்படைச் சகாக்கள், ட்ரக் வண்டி ஒன்றில் வந்து அங்கிருந்தவர்களையும் தாக்கி, வீடுகளையும் வாகனங்களையும் சேதப்படுத்தியுள்ளனர்.

இதனால், நேற்றுக்காலை அப்பகுதியில் பதற்றம் நிலவியது. பாதைகளில் ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டன. வாகனங்கள் கல்வீச்சுக்கு இலக்காகின.

இச்சம்பவம் குறித்துப் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

# என்னைப் பதவி நீக்குவதற்கு கட்சிதான் தீர்மானிக்க முடியும்!

## யாருக்கும் அடிபணிய மாட்டேன் - ஆனந்தசங்கரி

(கொழும்பு)

“தமிழர் விடுதலைக் கூட்டணி என்னைப் பதவி விலகுமாறு கேட்டால் மட்டுமே, தலைமைப் பதவியிலிருந்து நான் விலகுவேன். வேறு யாருடைய அழுத்தத்திற்கும் நான் அடிபணியப் போவதில்லை” எனத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

ஜூன் முதலாம் திகதிக்கு முன்னர்- கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து ஆனந்தசங்கரி விலக வேண்டும் என நிர்ப்பந்தம் எழுந்துள்ளதாகப் பத்திரிகைகளில் வெளியான செய்திகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே, நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்தசங்கரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“நான் தலைமைப் பதவியைத் தொடர்வதா, இல்லையா என்று கட்சியே முடிவு செய்யவேண்டும். கட்சி என்னிடம் தலைமைப் பதவியை மீளப்பெற வேண்டுமாக இருந்தால், கட்சி எடுக்கும் தீர்மானத்திற்கு நான் மதிப்பளிப்பேன். யாருடைய அழுத்தத்திற்கும் நான் அடிபணியப் போவதில்லை” எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# முஸ்லிம் இளைஞன் படுகொலை; ராணுவ கப்டன் உட்பட இருவர் கைது!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - ஓட்டமாவடியில், முஸ்லிம் இளைஞனொருவன் கொல்லப்பட்டு, அவரது சடலம் மீராவோடை தமிழ்க் கிராமத்தில் அநாதரவாகப் போடப்பட்ட சம்பவம் தொடர்பாக, இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த கப்டன் ஒருவரும், ஓட்டோ சாரதி ஒருவரும் வாழைச்சேனையில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் இருவரும் மட்டக்களப்பு நீதிவான் ஏ.எல்.அப்தூல் கபூர் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர்.

இருவரையும் ஜூன் மாதம் 10 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் - தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் தடுத்துவைக்கப்பட்டிருப்பதால் இவர்களை அங்கு அனுப்பவேண்டாமென, படைத் தரப்பினர் மனுச்செய்ததையடுத்து, மொனராகலை சிறைச்சாலையில் இவர்களைத் தடுத்துவைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

நாவலப்பிட்டியைச் சேர்ந்த முகமட் ராசிக் உசைன் என்பவர், சில தினங்களுக்கு முன்னர் கொலைசெய்யப்பட்டு தமிழப் பிரதேசத்தில் சடலமாக மீட்கப்பட்டார்.

இதனால், தமிழ் - முஸ்லிம் உறவு பாதிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டபோதிலும், தமிழீழ விடுதலைப் புலிகள் நிலைமையை விளக்கி துண்டுப்பிரசுரம் மூலம் உண்மைநிலையை வெளியிட்டதையடுத்து, அமைதி பேணப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# அரியாலை - கொழும்புத்துறையில் சட்டவிரோத மண் அகழ்வு அதிகரிப்பு

## இரவிரவாக நடக்கிறது மண் கடத்தல்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை - அரியாலைப் பகுதிகளில், சட்டவிரோத மண் அகழ்வு, கடந்த சில தினங்களாக அதிகரித்துள்ளது.

இரவுவேளைகளில் - லான்ட் மாஸ்ரர், ட்ராக்டர்களில் வருபவர்கள்- சட்டவிரோதமாக மண்ணைக் கடத்திச் செல்கின்றனர். மண் கடத்தல் நடவடிக்கையினை தட்டிக் கேட்ட பொதுமக்கள் இவர்களால் மிரட்டப்பட்டுள்ளனர். இவர்களின் மண் அகழ்வு நடவடிக்கைக்கு இராணுவத்தினர் சிலரும் துணைபோவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரவுவேளைகளில் அகழப்படும் மண், மிகவும் மலிவான விலையில் விற்கப்படுவதால், இதற்குப் பலர் முண்டியடிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

சில கட்டட ஒப்பந்தகாரர்களும் மணல் அகழவுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன்- கடந்த சில தினங்களுக்கு முன்னர், நெடுங்குளம் பகுதியில் இரண்டு ட்ராக்டர்களில் வந்த கும்பலொன்று, வீட்டு உரிமையாளரின் அனுமதியில்லாது - முற்றத்தில் இருந்த மணலை எடுத்துச் சென்றதாகவும் தெரியவருகிறது. (சு)

### சமய அறிவுப் போட்டி

கோண்டாவில் - தில்லையம்பதி சிவகாமி அம்பாள் ஆலய மகோற்சவத்தை ஒட்டி, அகில இலங்கை இந்து மாமன்றம், மத்திய கிராம முன்னேற்றச் சங்கம், அறநெறிப்பாடசாலை ஆகியன இணைந்து நடாத்தும் சைவசமய அறிவுப்போட்டி, எதிர்வரும் ஞாயிறு காலை 8.30 மணிக்கு கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

### பீரிஸ், ஜோன் அமரதுங்க, மாரப்பன தவிர்ந்த

# அமைச்சர்களுக்கான பாதுகாப்பு; குறைப்பதற்கு அரசாங்கம் முடிவு!

(கொழும்பு)

முக்கிய அமைச்சர்கள் தவிர்ந்த அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான, மெய்ப்பாதுகாவலர்களின் எண்ணிக்கையைக் குறைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அமைச்சர்கள்- ஜி.எல்.பீரிஸ், ஜோன் அமரதுங்க, திலக் மாரப்பன ஆகியோரைத் தவிர்ந்த, ஏனைய அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பைக் குறைக்கவே முடிவு செய்யப்பட்டுள்ளது.

முக்கிய அமைச்சர்கள் தவிர்ந்த ஏனைய அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் உத்தியோகபூர்வ பயணங்களின்போது மட்டும் இனிப் பாதுகாப்பு வழங்கப்படும்.

அண்மையில், ஹில்டன் ஹோட்டேலில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதையடுத்தே, இந்த நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட ஆயுதங்களைத் திருப்பி ஒப்படைக்குமாறும் அரசாங்கம் கோரவுள்ளது. இது தொடர்பாக ஆராய, ஐ.தே.கவின் மத்திய குழு எதிர்வரும் வியாழக்கிழமை கூடவுள்ளது.

இப்போது, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தனிப்பட்ட பாதுகாப்புத் தேவையில்லை எனக் கருதுவதாக- ஐ.தே.கவின் தவிசாளர் செனரத் கப்புக்கொட்டுவ தெரிவித்தார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இது குறித்து உத்தரவுகளை பிறப்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வரதர் உறுப்பினர் ஒருவர் மீது திருமலை நகரில் துப்பாக்கிச் சூடு

(திருகோணமலை)

திருகோணமலை நகரில் வைத்து, ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர் ஒருவர், நேற்றிரவு இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்றிரவு 8.45 மணியளவில், மடத்தடியில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில், கிருபைராசா என்பவரே கொல்லப்பட்டவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

சீ வியூ வீதிச் சந்தியிலுள்ள அலுவலகத்திலிருந்து, மடத்தடியிலுள்ள தனது வீட்டுக்கு சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோதே இவர்- சுடப்பட்டதாகத் தெரியவருகின்றது.

இவருடைய சடலம் திருகோணமலை வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

(04,10)

## நகைக்கடையில்..

கடையிலிருந்தே இவரது சடலம் நேற்றுக்காலை மீட்கப்பட்டது.

இந்த நகைக்கடையில் பணியாற்றிய மூதூரைச் சேர்ந்த சபாரட்ணம் விஜயகோபால் (வயது 20) என்ற இளைஞரே மரணமானவரென அடையாளம் காணப்பட்டார்.

குறிப்பிட்ட நகைக்கடையில் இரவு தங்கியிருந்த இவர் - மறுநாள் கடை திறக்கப்பட்டவேளை மர்மமான முறையில் இறந்துகிடக்கக் காணப்பட்டார்.

இவரது மரணம் தொடர்பான விசாரணை, நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் நடைபெற்றது.

## சமூகச் சீரழிவை...

விடுதலைப் புலிகளும் மக்கள் அமைப்புக்களும் இணைந்து தீவிர நடவடிக்கைகளை எடுத்துவருகின்றன.

தற்போது - யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் கொலை, கொள்ளை மற்றும் பாலியல் வன்முறைகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு, சம்பந்தப்பட்டவர்களை இனங்கண்டு, அவர்களை மக்களின் முன்பாக வெளிப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குற்றமிழைப்பவர்கள் மீது தகுந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவிருப்பதாக அறியவருகின்றது. (லி)

# 2000 விளையாட்டு வீரர் பங்கேற்கும் மாபெரும் விளையாட்டு விழா யாழில்!

### ஏற்பாடுகளை ஆராய அமைச்சர் ராஜித சேனாரட்ண வருகை

தென்பகுதி மற்றும் வடபகுதியைச் சேர்ந்த, இரண்டாயிரம் விளையாட்டு வீரர்கள் பங்குபற்றும் சமாதான விளையாட்டு விழாவை-யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் துரிதமாக மேற்கொள்ளப்

## முழு இடைக்கால....

நேற்றுக் காலை நடைபெற்ற இச்சந்திப்பில் - பிரதமர், பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன், அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோரும் உடனிருந்தனர்.

விடுதலைப் புலிகள், தமது தமிழீழக் கோரிக்கையை விட்டு, ஏற்றுக்கொள்ளக்கூடிய மாற்றுத் தீர்வொன்றைப் பரிசீலிக்கத் தயாராக இருக்கின்ற இந்த வேளையில் - அரசாங்கம், முழுமையான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை, ஏற்கனவே வாக்குறுதி அளித்ததன் பிரகாரம் ஏற்படுத்த வேண்டும் என, கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரிடம் கேட்டுக்கொண்டனர்.

இச்சந்திப்பில் - கூட்டமைப்பின் சார்பில் இரா.சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பட்டுவருகின்றன.

இது தொடர்பான கலந்துரையாடலொன்று, நேற்றுக்காலை 11 மணிக்கு யாழ்.செயலகத்தின் மாநாட்டு

## பச்சை மட்டை...

அப்பகுதியில் காணப்பட்ட படையினர் - சிறிய ஒலிபெருக்கிகள் மூலம் குறிப்பிட்ட முகாமின் முட்கம்பிகளில் முட்டவோ, உள்ளே நுழையவோ வேண்டாம் என்று - போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுக்கு அடிக்கடி அறிவுறுத்தல் வழங்கிக்கொண்டிருந்தனர்.

மேலும் - போராட்டம் முடிகின்ற சில மணி நேரங்களில் அப்பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் வந்த படையினர் ரோந்து நடவடிக்கையைத் தீவிரப்படுத்தி இருந்தனர். இதனால் அப்பகுதியில் பதற்றம் நிலவியது.

அதேவேளை - நேற்றைய மறியற்போராட்டம் தொடர்பான செய்திகளை சேகரிக்க அப்பகுதிக்குச் சென்ற பத்திரிகையாளர்கள், படப்பிடிப்பாளர்கள் அப்பகுதியில் சுதந்திரமாகச் செயற்பட்டுச் செய்திகளைச் சேகரிக்க முடியாதவாறு படையினரால் மிரட்டலுக்கு உட்படுத்தப்பட்டனர். (09,சு)

மண்டபத்தில் நடைபெற்றது.

காணிஅமைச்சர் ராஜித சேனாரட்ன பங்கேற்க, அரச அதிபர் பத்மநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், விளையாட்டு விழா பற்றிய முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டன.

விளையாட்டு நிகழ்விற்குத் தேவையான பாதுகாப்பு வேலைகள், மருத்துவ வசதிகள், போன்ற பல விடயங்கள் பற்றி முக்கியமாக ஆராயப்பட்டது.

இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் கலந்துகொள்ளவுள்ள இவ்விளையாட்டு விழாவில- வழமையான போட்டிகளுடன் மேலதிகமாக கால்பந்து, எல்லே, கிரிக்கெட், சைக்கிள் ஓட்டப்போட்டி என்பனவும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேற்றையதினம் மாலை, அரச செயலகத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் - நாடாளும்ன்ற உறுப்பினர்கள், மாகாணசபை செயலாளர்கள், விளையாட்டுத்துறைப் பணிப்பாளர்கள், யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர், யாழ். பிராந்திய பிரதி இராணுவத்தளபதி, செஞ்சிலுவைச்சங்கத்தின் பிரதிநிதிகள், அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தோர், உதவி விளையாட்டுத்துறைப் பணிப்பாளர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், இலங்கைப் போக்குவரத்துச் சபையினர், இளைஞர் சேவை மன்ற உத்தியோகத்தர்கள், மாநகர சபை உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(ரா)

## வல்வையில்....

மளிகைக்கடைச் சரக்கா?'' போன்ற கோஷங்கள் அடங்கிய சுலோக அட்டைகளைத் தாங்கியிருந்தனர்.

நேற்றுக்காலை 9.45 மணிக்கு ஆரம்பமான மேற்படி போராட்டம் 11.15 மணிவரை நீடித்தது.

இதேவேளை - இப்போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்துக்கும், சம்பவ இடத்திற்கு வந்திருந்த 524 பிரிகேட்டினைச் சேர்ந்த கேணல் ரத்னாயக்கவிற்குமிடையில், காரசாரமான வாக்குவாதம் இடம்பெற்றது.

'இது - இராணுவத்துக்குச் சொந்தமான நிலம். இங்கே இராணுவ முகாம் அமைப்பது சட்டப்படி குற்றமல்ல. நீங்கள் இன்று மறியல் செய்தாலும் நாம் முகாம் அமைப்பதை நிறுத்தப் போவதில்லை. தொடர்ந்தும் நாம் முகாம் அமைக்கும் பணியில் ஈடுபடுவோம்' என்றும் - கேணல் ரத்னாயக்க அப்போது தெரிவித்தார்.

நேற்றைய போராட்டத்தின் காரணமாக - வடமராட்சிப் பகுதியிலுள்ள வர்த்தக நிறுவனங்கள் யாவும் பூட்டப்பட்டிருந்ததோடு, மீனவர்களும் கடலுக்குச் செல்லவில்லை. வீதிகளில் சனநடமாட்டம் குறைவாகவே காணப்பட்டது.

(09,124,சு)

## மந்த நிலையில்...

திறமையின்மை குறித்து விபரிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கருத்துக்கு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி உதவிகள் கிடைக்காமையே காரணம் என்று ஆசிய அபிவிருத்தி வங்கியின பிரதிநிதி ஜோன்கூனி தெரிவித்தார்.

திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்ட பின்னரும் அது மக்களுக்குப் பயன்படுத்தப்படாத நிலையிலுள்ளதற்கு அதிகாரிகள் மட்டத்திலுள்ளோரின் செயலற்ற தன்மையே காரணமாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை - உலகவங்கியின் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் , சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதி ஜேர்மி காட்டர் ஆகியோரும் இதே கருததையே முன்வைத்துள்ளனர்.

உலகவங்கிப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் கருத்துத் தெரிவிக்கையில் -

இலங்கையில் திட்டங்களுக்கான நிதி செலவிடுவதிலும், அரசியல் தலையீடுகளால் முடிவுகளை எடுப்பதிலும் பலவீனமான நிலை காணபடுகிறது. அத்துடன், அதிகாரிகள் மட்டத்தில் அர்ப்பணிப்புத் தன்மையில்லை. இந்தத் தவறுகளை அரசு நிவர்த்திசெய்யத் தவறினால், திருத்த முடியாத கட்டத்துக்குச் செல்ல வேண்டிவரும்.

அரசின் திட்டங்கள் சரியாக முன்னெடுக்கப்படவில்லை. பல திட்டங்கள் சென்றடையவேண்டிய மக்களைச் சென்றடையவில்லை.

தெற்கில் இந்தத் திட்ட நிதி - அதிகாரிகளின் சம்பளத்துக்கும், திட்ட மதிப்பீடுகளுக்குமே சென்று சேர்கிறது என்றார்.

இலங்கைக்கு வருடாந்தம் 500 முதல் 600 மில்லியன் டொலர் நிதியுதவி கிடைக்கிறது. ஆனால், இதில் 2.5 மில்லியன் டொலர் நிதி பயன்படுத்தப்படுவதில்லை. இது இலங்கைக்கான நிதியுதவி பற்றிய கேள்வியை எழுப்பியுள்ளது.

ரோக்கியோ மாநாட்டில் 3 பில்லியன் ரூபா நிதியுதவியை அரசு கேட்டுள்ளது. இந்த நிதியுதவியை அரசு எவ்வாறு பயன்படுத்தப் போகிறது என்று ஆசிய அபிவிருத்தி வங்கி, உலகவங்கி என்பன கேட்டுள்ளன.

(01,200)

## அரசின் யோசனை...

பொறுப்புவாய்ந்தது எனவும், வடக்கு-கிழக்கிலுள்ள அனைத்துச் சமுகங்களது நலனைப் பாதுகாப்பது எனவும், விடுதலைப் புலிகளுக்கு முக்கிய பங்கைத் தருவதெனவும், இலங்கையின் சட்டங்களுடன் முரண்படாதது எனவும் பிரதமர் வலியுறுத்தியுள்ளார்.

அரசாங்கத்தின் யோசனையில் கூறப்பட்டிருக்கும் உயர்மட்ட ஆலோசனைக்குழு, திட்ட இலக்குகளை வெளியிடும் நிர்வாக அதிகாரத்தைக் கொண்டிருக்கும் எனவும், வட - கிழக்கின் புனரமைப்பு, புனர்வாழ்வு, அபிவிருத்திப் பணிகளில் - உடனடி மற்றும் நடுத்தரக் காலஎல்லைகள் கொண்ட சகல திட்டங்களுக்குமான முக்கிய முடிவுகள் மேற்கொள்ளும் அதிகாரங்களை கொண்டிருப்பது இதன் பிரதான செயற்பாடாக இருக்குமென வும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ள பிரதமர் -

மிக முக்கிய பங்காற்றவுள்ள இந்தக் குழுவின் அமைப்பு மற்றும் அளவு பற்றி அரசும் - புலிகளும் பேசித் தீர்வு காணலாம் எனத் தெரிவித்துள்ளார்.

இந்த உயர்மட்டச் சபையில் விடுதலைப் புலிகள் பெரும்பான்மையான அதிகாரத்தைக் கொண்டிருப்பதுடன், வட - கிழக்கில் வாழும் முஸ்லிம், சிங்கள மக்களின் நலன்களும் பாதுகாக்கப்படும் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

இதேவேளை, வட-கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அபிவிருத்திப் பணிகளில் நடுத்தர நிலைகளில் இயங்கவுள்ள துணைப் பொறிமுறைகளிலும் விடுதலைப் புலிகளின் வலுவான பங்கேற்பு இருக்குமெனவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

வட - கிழக்கில் விடுதலைப் புலிகள் மேற்கொள்ள எண்ணங்கொண்டுள்ள- அபிவிருத்தி, புனர்வாழ்வு, மனிதாபிமானப் பணிகளில்- அரசாங்கத்தின் யோசனையின் வழியான அமைப்பு முழுஅளவில் உதவியாக இருக்குமெனத் தனது அறிக்கையில் தெரிவித்திருக்கும் பிரதமர் ரணில் -

இந்த விடயங்கள் பற்றி, முழுமையாகக் கலந்துரையாடவும், சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ளவும் அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் சந்தித்துப் பேசவேண்டும் எனவும் கோரியுள்ளார்.

அணுசரணையாளரின் பங்கேற்புடன் இரண்டு தரப்பும் இந்த விடயங்களில் கலந்து பேசுவதற்கு - தான் நோர்வே வெளிவிவகார அமைச்சருக்கு கடிதம் எழுதி அவரது உதவியைக் கோரியிருப்பதாகவும் பிரதமர் தனது கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

இந்தக் கடிதத்தில், தனது அரசின் யோசனைகள் பற்றியே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விபரித்திருந்தபோதும் - விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக அமைப்புப் பற்றி எவ்விடத்திலும் குறிப்பிடப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது. (01,200)

CCS @ GLOBAL VILLAGE COMPUTER EDUCATION

✻ இலவசக் கணினிக் கல்வித் திட்டம ✻

குலுக்கல் முறையிலான தெரிவின் மூலம் 20 மாணவர்களுக்கு இலவச கணினிக் கல்வி வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

*முதலில் விண்ணப்பிக்கும் 500 மாணவர்களே இக்குலுக்கலில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.*

கற்கைநெறியைத் தொடரும் மாணவர்களிற்கான இந்தியாவின் முதல்தர நிறுவனமான

GLOBAL VILLAGE COMPUTER EDUCATION

இனால் அங்கீகாரம் கொண்ட சான்றிதழ்கள் வழங்கப்படும்.

குலுக்கலுக்கான பதிவுகள (REGISTRATION FOR LOTTRY)

ஏற்கப்படும் திகதி :- 03.06.2003 முதல் 14.06.2003 வரை

குலுக்கல் நடைபெறும்

திகதி நேரம் :- 18.06.2003 3 மணி

நடைபெறும் இடம :- Global Village Computer Education
College of Computer Studies
302/1, Navalar road, Anaipanthy, Jaffna

குலுக்கலிற்கு சமுகமளித்த ஏனையவர்களுக்கு 20%, 50% கழிவு வழங்கப்படும்.

(சி-1035) Director

யாழ் நகரில்...

குறைந்த விலையில் SIM காட் பெற்றுக்கொள்வதற்கும் Life CLI பெற்றுக்கொள்வதற்கும் புதிய NOKIA Hand Phones ஒரு வருடத்திற்கான CLI எந்த வேளையிலும் Cit Kard ஐ பெற்றுக் கொள்வதற்கு

நீங்கள் நாடவேண்டிய இடம்

குமரன் கூல் பார்

இல.194, நாவலர் வீதி,
பெருமாள் வீதி சந்தி.

(சி-1039)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03.06.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.